Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, AUGUST 13, 2021

வெள்ளிக்கிழமை ஓகஸ்ட் 13, 2021 | ஒளி: 07 கதிர் 73 | பக்கம்:08 | நகரப்பதிப்பு

## இன்று கொடியேற்றம்



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மகோற்சவத்துக்கான கொடியேற்றம், இன்று (13) காலை நடைபெறும்.

## உயிர்களை பறிக்கும் அரசாங்கம் எதற்கு?


நமது நாடு 5,400க்கும் அதிகமான கொரோனா மரணங்களை சந்தித்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்வது வேதனையளிப்பதாகத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இவ்வாறான நிலைமை அதிகரிக்க அனுமதிக்கும் முழுப்பொறுப்பையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என தாம் வலியுறுத்துவதாகத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் பொறுப்புள்ள அமைச்சரொருவர், "மக்களை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்" எனக் கூறுகிறார். நாட்டு மக்களின் நிலை பற்றிச் சிந்திக்காமல், தமக்கு வாக்களித்த 69 மில்லியன் மக்களையும் இழிவுப்படுத்துவது போன்று அறிக்கை விடும் அளவுக்கு அரசாங்கம் மோசமடைந்துள்ளமை துரதிர்ஷ்டமானது என்றார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர், கொரோனா பேரழிவு இலங்கையை ஆக்கிரமிப்பதாக முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட போதும் எவ்வித அக்கறையும் இன்றி இருந்த அரசாங்கம், தற்போதும் மிகவும் பைத்தியக்காரத்தனமாகவும் பொறுப்பற்ற விதத்திலும் நடந்துகொள்கிறது என்றார்.



தொடர்ச்சி P2



## கொரோனா சடலங்களை விரைவாக தகனம் செய்க

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மரணிப்போரின் சடலங்களை, விரைவாக தகனம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளூராட்சி மன்றங்களின் பிரதானிகளுக்கு ஆலோசனைகளை வழங்குமாறு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க, அமைச்சின் செயலாளருக்குக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

## மணலுடன் சென்ற உழவு இயந்திரம்: துரத்திச் சுட்டதில் இளைஞன் படுகாயம்



■ கனகராசா சரவணன்

சமிக்ஞையை மீறி பயணித்த உழவு இயந்திரத்தின் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில், செங்கலடி பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய எஸ். துசாந்தன் என்ற இளைஞன் படுகாயமடைந்துள்ளான்.

தொடர்ச்சி P2


## கடும் மழையால் தத்தளிக்கும் மலையகம்



முழுச் செய்தி P5

## நுவரெலியாவில் டெல்டா பரவும் வாய்ப்புகள் அதிகம்

### முதலாவது நபர் தலைமறைவு: அருகில் இருந்தவருக்கு பொசிடிவ்



■ டி.ஷங்கீதன்

டெல்டா தொற்றுக்குள்ளான ஒருவர், நுவரெலியா- கொத்மலை பிரதேசத்துக்கும் வருகை தந்திருப்பதாக தான் சந்தேகம் கொள்வதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை நோயெதிர்ப்பு மற்றும் செல் உயிரியல் நிறுவனத்தின் அத்தியட்சகர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.


என்னுடைய தனிப்பட்ட அனுபமொன்றை இங்கு கூற விரும்புகின்றேன். நான் வசிக்கும் பகுதியில் வசிப்பவர்களில் ஒருவர், எனக்கு பெரிதும் பரீட்சையமானவர் அல்லர். தனக்கு இருமல் மற்றும் தடிமன் இருப்பதாக என்னிடம் தெரிவித்தார். நீங்கள் ஒரு பி.சி.ஆர் பரிசோதனையை உடனே செய்து கொள்ளுங்கள் எனக் கூறினேன்.

தொடர்ச்சி P2

## 4 இணையத்தளங்களுக்கு நீதிமன்றம் தடை விதிப்பு

### 15 வயது சிறுமி பாலியல் செயற்பாடுகளுக்கு விற்பனை;

கல்கிசை பிரதேசத்தில் 15 வயதான சிறுமியை பாலியல் செயற்பாடுகளுக்கு விற்பனை செய்வதற்காக விளம்பரப்படுத்திய நான்கு இணையத்தளங்களுக்கு தடை விதிக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.



தொடர்ச்சி P2

## கொரோனா உடல்களால் மஜ்மா நகர் நிரம்பிவிட்டது

### புதன்கிழமை வரையிலும் 1,539 உடல்கள் நல்லடக்கம்

■ அஸ்லம் எஸ்.மௌலானா, எச்.எம்.எம்.பர்ஸான்

கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் உடலங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி, மஜ்மா நகரில், நிரம்பி வழிவதால், அங்கு மேலும் உடலங்களை அடக்க முடியாத சூழ்நிலை உருவாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.



தொடர்ச்சி P2

## 2 அலுவலகங்களுக்கு 16 வரையிலும் பூட்டு

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் நாரஹேன்பிட்டிய மற்றும் வெரஹேர அலுவலகங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.




தொடர்ச்சி P2

## லாஃப் காஸ் விலை கூடியது

சமையல் எரிவாயு சிலிண்டரின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. உடன் அமுலுக்கு வரும் வகையில் விலை அதிகரிப்புக்கான அனுமதியை நுகர்வோர் அதிகார சபை வழங்கியுள்ளது.

இந்நிலையில், 12.5 கிலோகிராம் நிறையுடைய லாஃப் காஸ் சிலிண்டரின் விலை 363 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம், புதிய விலை 1,856 ரூபாயாகும்.

இதேவேளை, ஐந்து கிலோகிராம் நிறையுடைய சிலிண்டரின் விலை 145 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம், அந்த சிலிண்டரின் புதிய விலை 743 ரூபாயாகும். இது தொடர்பில், நேற்று (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் லசந்த அழகியவண்ண அறிவித்தார்.

## யாழில் இரண்டு மதுபான சாலைகளுக்குப் பூட்டு

■ ரொமேஷ் மதுஷங்க

யாழ்ப்பாணம், பருத்தித்துறையில் உள்ள மதுபான விற்பனை நிலையங்கள் இரண்டுக்கு நேற்று (12) சீல் வைக்கப்பட்டுள்ளன. அவ்விரு மதுபான விற்பனை நிலையங்களும் எதிர்வரும் 14 நாள்களுக்கு திறக்கப்படாது என பருத்தித்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் காரியாலயம் அறிவித்துள்ளது.



பருத்தித்துறையில் கோட்டு முற்சந்தி மற்றும் அனலைத்தீவு பிரதேசத்திலுள்ள மதுபான விற்பனை நிலையங்களே இவ்வாறு பூட்டப்பட்டுள்ளன.

கொரோனா தொற்றாளர்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் சில நபர்களுக்கும் மேற்படி மதுபான நிலைய ஊழியர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது, சுகாதார அதிகாரிகள் நடத்திய விசாரணையில் தெரியவந்துள்ளது.



## ரயில் ஊழியர்கள் வேலை நிறுத்தம்

■ இக்பால் அலி

நள்ளிரவு முதல் ரயில் ஊழியவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ரயில் திணைக்கள ஊழியர்களைப் பாதுகாப்பதற்கான வேலைத் திட்டங்கள் இல்லை எனவும் 78 ரயில் அதிகாரிகளுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டு, இருவர் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவித்தே, இந்த வேலை நிறுத்தம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, ரயில் நிலைய அதிபர் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மல்லாக்க புரண்ட இ.போ.ச பஸ்

### 24 பேர் படுகாயம்

■ எம்.றொசாந்த், நிதர்ஷன் வினோத், என்.ராஜ்

காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ், கல்லுண்டாய் வீதியில் நேற்று (12) காலை 7.30 மணியளவில் விபத்துக்கு உள்ளானது.

இதில், 24 பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்த அனைவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



தொடர்ச்சி P2

## உயிரிழந்த சிறுமிக்கு நீதிகோரி தீர்மானம்



■ சே.கீதாஞ்சன்

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் உயிரிழந்த 16வயதான சிறுமிக்கு நீதி கோரியும், கண்டனங்களை வெளியிட்டும், முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் 39 ஆவது அமர்வு தவிசாளர் க.விஜிந்தனின் நெறிப்படுத்தலில் உப தவிசாளர் தி.இரவீந்திரன் தலைமையில், நேற்று (12) நடைபெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

EN Newspapers Viber Community

PAGE 1 தொடர்ச்சிகள்

## கொரோனா சடலங்களை விரைவாக தகனம் செய்க

சடலங்களை எரியூட்டும்போது ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில், விசேட கவனத்தை செலுத்தியதன் பின்னரே, மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகத்தின் கீழ், தற்போது 239 தகனசாலைகள் உள்ளன. சிலவற்றை இயக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அது தொடர்பில் ஆராய்ந்து அவ்வாறான தகனசாலைகளை திருத்தி, மின்சாரம் தடைப்படும் போது, ஜெனரேட்டர்களைப் பயன்படுத்தும் வகையில், ஜெனரேட்டர்களை வழங்குதல், காஸ் சிலிண்டர்களைப் பயன்படுத்தல் மற்றும் சேவையாளர்கள் பாதுகாப்பு உடை மற்றும் உபகரணங்கள் உள்ளிட்டவை தொடர்பிலும் இராஜாங்க அமைச்சர் கவனம் செலுத்தியுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் 54, கம்பஹா மாவட்டத்தில் 28, களுத்துறை மாவட்டத்தில் 24 என, மேல் மாகாணத்தில் மட்டும் 106 தகனசாலைகள் உள்ளன.

மத்திய மாகாணணத்தில் 27, தென் மாகாணத்தில் 40, வட மாகாணத்தில் 2, கிழக்கு மாகாணத்தில் 6, வடமேல் மாகாணத்தில் 24, சப்ரகமுவ மாகாணத்தில் 16 வடமத்திய மாகாணத்தில் 7, ஊவா மாகாணத்தில் 11 தகனசாலைகளும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## நுவரெலியாவில் டெல்டா பரவும் வாய்ப்புகள் அதிகம்

கொழும்பில் வசிப்பவராக இருந்தாலும் அவருடைய சொந்த இடம் நுவரெலியாவில் உள்ள கொத்மலை பிரதேசம். பி.சி.ஆர் செய்து கொள்ளுமாறு கூறிய அன்றைய தினமே அவர் தன்னுடைய ஊரான கொத்மலை பிரதேசத்துக்குப் புறப்பட்டு சென்றுவிட்டார்.

எனது கணிப்பீட்டின் பிரகாரம், அவர் ஒரு டெல்டா தொற்றாளராக இருக்க வேண்டும். டெல்டா தொற்று இல்லாத பிரதேசமான நுவரெலியாவுக்கு டெல்டா தொற்றை, கொழும்பிலிருந்து அவர் கொண்டு சென்றுள்ளார் என்றே நான் கருதுகின்றேன்.

அல்பா என்ற தொற்று மாத்திரமே இதுவரையிலும் நுவரெலியாவில் இருந்தது. இப்பொழுது இந்த டெல்டாவும் அங்கு சென்று விட்டது என்றே நான் கருதுகின்றேன். எதிர்காலத்தில் டெல்டா தொற்று நுவரெலியா பிரதேசத்தில் உருவாவதற்கான வாய்ப்பு இருக்கின்றது.

இதில் மிகவும் முக்கியமான ஒரு விடயம்தான் அவருடன் தங்கியிருந்த இன்னுமொரு நபர், மறுதினம் காய்ச்சலுடன் வருகை தந்தார். சந்தேகத்துக்கிடமான நபருடன் தொடர்பில் இருந்ததால் நீங்களாவது உடனடியாக சென்று பி.சி.ஆர் பரிசோதனை ஒன்றை செய்து கொள்ளுங்கள் என்று கூறினேன்.

அவர் பி.சி.ஆர் பரிசோதனைக்கு தன்னை உட்படுத்தியுள்ளார். நான் தொலைபேசி அழைப்பு ஒன்றின் மூலமாக கேள்விப்பட்டேன் இரண்டாவது நபருக்கு பி.சி.ஆர் சோதனை முடிவு பொசிடிவ் என. இது மிகவும் துரதிர்ஷ்டவசமான ஒரு நிலைமை.

நாட்டு மக்களிடம் சுய ஒழுக்கத்தை நாங்கள் எதிர்பார்க்கின்றோம் ஆனால், இந்தச் சம்பவத்தில் சுய ஒழுக்கம் எங்கே? இவர் மூலமாக இன்னும் பலருக்கு இந்தத் தொற்று ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது. எனவே அனைவரும் தயவுசெய்து பொறுப்புடன் நடந்து கொள்ளுங்கள் எனக் கேட்டுக்கொண்டார்.

# உயிர்களை பறிக்கும் அரசாங்கம் எதற்கு?

கொரோனாவைக் கட்டுப்படுத்த பல நாடுகள் தடுப்பூசி செலுத்தும் பணி உள்ளிட்டவையை அந்தந்த நாடுகளின் சுகாதாரத் தரப்பினரிடம் ஒப்படைத்தது. ஆனால், எமது அரசாங்கமோ வைத்தியர் மலித் பீரிஸ், ஆனந்த விஜேவிக்ரம, அனில் ஜாசிங்க, ரவி ரணன், போன்ற நிபுணர்களின் ஆலோசனைகளை புறக்கணித்தது என்றார். எனவே, நாடு கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அரசாங்கம் அதிகார வெறி, மாயை, ஆணவம் மற்றும் பொறுப்பற்ற தன்மை போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் துரதிர்ஷ்டவசமாக இதன் விளைவை மக்கள் எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது என்றார்.

## 4 இணையத்தளங்களுக்கு நீதிமன்றம் தடை விதிப்பு

இது தொடர்பில், கொழும்பு நீதவான் நீதிமன்றம், தேசிய தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு உத்தரவிட்டுள்ளது.

குறித்த இணையத்தளங்களுக்கு தடை விதிக்குமாறு, சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், இது போன்ற இணையத்தளங்களுக்கு தகவல்களைப் பதிவேற்றுதல் உள்ளிட்ட விடயங்கள் குற்றச்செயலாகும் எனவும், பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இச்சம்பவம் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் கூறினர்.

## 2 அலுவலகங்களுக்கு 16 வரையிலும் பூட்டு

அவ்விரு அலுவலகங்களிலும் பணியாற்றும் ஊழியர்கள் சிலருக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது உறுதியானது. இதனையடுத்தே, அவ்விரு அலுவலகங்களும் எதிர்வரும் 16ஆம் திகதி வரையிலும் மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சாரதி அனுமதிப்பத்திர காலாவதித் திகதி இந்த வருடம் டிசெம்பர் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக, போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு 01, சேர் பரோன் ஜயதிலக்க மாவத்தையில் லாயிட்ஸ் கட்டடத்தில் உள்ள, ஊழியர் சேமலாப நிதி (EPF) இன் பொதுத் தொடர்பு மற்றும் விசாரணை கூடங்கள், எதிர்வரும் 20ஆம் திகதி வரையிலும் மூடப்பட்டுள்ளன. அங்கு பணியாற்றிய அப்பிரிவின் பணியாளர்கள் சிலருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்தே அந்த கூடங்கள் மூடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## மல்லாக்க புரண்ட இ.போ.ச பஸ்

கல்லுண்டாய் பகுதியில் வீதி புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. இந்நிலையில், வேகமாக வந்த பஸ், மழை காரணமாக சறுக்கி விபத்துக்குள்ளாகியுள்ளது என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

விபத்துத் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## உயிரிழந்த சிறுமிக்கு நீதிகோரி தீர்மானம்

தொடக்கத்தில் கொரோனா தொற்றினால் உயிரிழந்த வல்லை நகரசபை தவிசாளருக்கு அகவணக்க அஞ்சலி செலுத்தி சபை அமர்வு ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது பிரதேச சபை உறுப்பினர் அன்டனி ரங்கதுசார பிரோரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

ரிசாட் எம்.பியின் வீட்டில் பணி புரிந்த சிறுமியின் உயிரிழப்பிற்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் நீதியான தீர்ப்பினை வழங்கவேண்டும் என சபையின் உறுப்பினர்களால் ஆதரவு வழங்கப்பட்டு கண்டனங்கள் வெளியிடப்பட்டன.

சபையின் உறுப்பினர்களான சி.லோகேஸ்வரன்,த.அமலன் ஆகியோர் கண்டனங்கள் வெளியிட்டுள்ளதுடன் சரியான நீதியான விசாரணை தேவை என்பதை வலியுறுத்தியள்ளதுடன் தீர்மானத்திற்கு ஆதரவினையும் வழங்கியுள்ளார்கள்.

## பொலிஸார் துரத்திச் சுட்டதில்

மட்டக்களப்பு - கரடியனாறு, பங்குடாவெளிச் சந்தியிலேயே இந்தச் சம்பவம், நேற்று (12) அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் காயமடைந்த இளைஞன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

உழவு இயந்திரத்தை, பொலிஸார் நிறுத்த முயற்சித்துள்ளனர். எனினும், பொலிஸாரின் சமிக்கையை மீறி உழவு இயந்திரம் பயணித்துள்ளது. இந்நிலையில், பொலிஸார். அதனை துரத்திச் சென்றுள்ளனர். ஒருகட்டத்தில் அந்த உழவு இயந்திரம் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். இதன்போதே, அதில் பயணித்த இளைஞன் படுகாயமடைந்துள்ளார்.

அந்த உழவு இயந்திரத்தில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து, எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

> “ அதில் பயணித்த இளைஞன் படுகாயமடைந்துள்ளார்.
> அந்த உழவு இயந்திரத்தில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து, எடுத்துச் செல்லப்பட்டுள்ளது

## கொரோனா உடல்களால் மஜ்மா நகர் நிரம்பிவிட்டது

> “ கொரோனா உடல்களை நல்லடக்கம் செய்யும் ஊழியர்கள் சலிப்பின்றி இரவு 12 மணி வரை தாண்டியும் நல்லடக்கப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்

இதனால் கொரோனா ஜனாஸாக்களை அடக்குவதற்காகத் தெரிவு செய்யப்பட்டு, பரிந்துரைக்கப்பட்டுள்ள இடங்கள் தொடர்பில் ஆகக் கூடுதலான கவனத்தை செலுத்த வேண்டும் என சாய்ந்தமருது சமூக, கலாசார அபிவிருத்தி மன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா , மற்றும் அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம் போன்ற இடங்களிலும் அடக்கம் செய்ய உடனடியாக அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் அம்மன்றம் கோரியுள்ளது.

அத்துடன், மாவட்டம் தோறும் அவசரமாக புதிய இடங்கள் அடையாளம் காணப்பட வேண்டும் எனவும் அந்த மன்றம் வலியுறுத்தியுள்ளது. இதனை வலியுறுத்தி ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதங்களை அனுப்பி வைத்திருப்பதாக மன்றத்தின் தவிசாளர் எம். அஹமட்லெப்பை, நேற்று (12) தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "மஜ்மா நகரில் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் மாத்திரமல்லாமல் இந்து, பௌத்தர், கிறிஸ்தவர் உள்ளிட்ட அனைத்து இனத்தவரினதும் உடலங்கள் அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன என்றார்.

இதேவேளை, மஜ்மா மையவாடியில் ஒகஸ்ட் 11ஆம் திகதி புதன்கிழமை வரை 1,539 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன என ஓட்டமாவடி பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

அத்துடன், சடுதியாக உயர்ந்த கொரோனா மரணங்களில் ஒகஸ்ட் 1ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை குறித்த மையவாடியில் 308 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இதில், 10ஆம் திகதி மாத்திரம் 37 ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. இதுவே ஒரேநாளில் அதிகூடிய உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட நாளாக பதிவாகியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொரோனா உடல்களை நல்லடக்கம் செய்யும் ஊழியர்கள் சலிப்பின்றி இரவு 12 மணி வரை தாண்டியும் நல்லடக்கப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த மையவாடியில் இதுவரை 1,448 முஸ்லிம்கள், 42 இந்துக்கள், 28 கிறிஸ்தவர்கள், 21 பௌத்தர்களின் உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன என தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

## ரயில் ஊழியர்கள் வேலை நிறுத்தம்

குருநாகலில் நேற்று (12) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, அவர் இதனைத் தெரிவித்தார். ரயில ஊழியர்களை பாதுகாப்பதற்கான வேலைத் திட்டங்கள் எவையும் இல்லை. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, எங்களது பாதுகாப்பு உறுதி செய்து தருமாறு கோரி, நாடளாவிய ரீதியில் நாளை (இன்று 13) 24 மணி நேரம் ரயில் ஊழியர்கள்; அனைவரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர் என அவர் தெரிவித்தார். இதன்மூலம் தமக்குத் தேவையான பாதுகாப்பை உறுதி செய்து தருமாறு ரயில்வே திணைக்களத்துக்கும் அரசாங்கத்துக்கும் அழுத்தம் கொடுக்கவுள்ளதாகத் தெரிவித்த அவர், அசௌகரியங்களை எதிர்நோக்கும் ரயில் பயணிகளிடம் மன்னிப்பும் கோரினார்.

ரயில் போக்குவரத்துச் சேவை ஸ்தம்பிதம் அடைவதற்கு ரயில்வே திணைக்களமும் மற்றும் போக்குவரத்து அமைச்சும் பொறுப்புக் கூற வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இராணுவத்தின் நடமாடும் தடுப்பூசி திட்டம் ஆரம்பம்

தேசிய தடுப்பூசி செயற்றிட்டத்தை துரிதப்படுத்தும் வகையில், நடமாடும் தடுப்பூசி திட்டத்தை இராணுவம் ஆரம்பித்துள்ளது.

மேல்மாகாணத்துக்குள் இதுவரையிலும் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாத வயதானவர்கள், வெவ்வேறு தேவைகளை உடையவர்கள் ஆகியோருக்காக, இந்த நடமாடும் தடுப்பூசி செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுரவில் உள்ள இராணுவ தலைமையகத்தில் இருந்து இந்த செயற்றிட்டம், கொவிட்-19 செயலணியின் பிரதானி ஜெனரல் ஷவேந்திர சில்வா, நேற்று (12) ஆரம்பித்துவைத்தார். தெமட்டகொட பிரதேசத்தை உள்ளடக்கும் வரையில் ஒரு வாகனமும்.

கொழும்பு-15, முகத்துவாரம் பிரதேத்தை உள்ளடக்கும் வகையில் 3 வாகனங்கள். கங்காராம மாவத்தை- மட்டக்குளிய பிரதேசத்தை உள்ளடக்கும் வகையில் ஒரு வாகனம். கொழும்பு-14, கிராண்பாஸ் பிரதேசத்தை உள்ளடக்கும் வகையில் மூன்று வாகனங்கள்.

கொழும்பு-15 புளுமென்டல் பிரதேசத்தை உள்ளடக்கும் வகையில் இரண்டு வாகனங்கள்

என்றடிப்படையில் 10 வாகனங்கள் நடமாடும் தடுப்பூசி ஏற்றும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## நாட்டை முடக்குமாறு ஐ.ம.ச வலியுறுத்து

எதிர்வரும் செப்டம்பர் 20ஆம் திகதிவரை நாட்டை முடக்கும்படி ஐக்கிய மக்கள் சக்தி, அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது. கொழும்பிலுள்ள எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று (12) நடந்த ஊடக சந்திப்பில் பேசிய எஸ்.எம் மரிக்கார் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

நாட்டில் உள்ள அபாயகரமான சூழ்நிலையை மருத்துவ நிபுணர்கள் தொடர்ந்து எச்சரித்த போதிலும் அரசாங்கம் ஏன் இன்னும் நாட்டை முடக்கும் தீர்மானத்தை எடுக்கவில்லை என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## டிசெம்பர் 31 வரை செல்லுப்படியாகும்

சாரதி அனுமதிப்பத்திர காலாவதி திகதி இந்த வருடம் டிசம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதனை, போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, போக்குவரத்து அமைச்சில் நேற்று(12) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொரோனா தொற்று பரவல் காரணமாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் வேரஹெர மற்றும் நாரஹேன்பிட்டி அலுவலகங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை (16) முதல் 07 நாட்களுக்கு மூடப்பட்டுள்ளதாக திலும் அமுனுகம மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நாட்டில் மேலும் 2,420 பேருக்கு கொரோனா

நாட்டில் மேலும் 2,420 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என கொவிட்-19 செயலணியின் பிரதானி, இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் புதுவருட கொவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

அதன்படி, இந்நாட்டு மொத்த கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 344,499 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றில் இருந்து இதுவரை பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 302,455 ஆக அதிகரித்துள்ளது.

LK Newspapers Viber Community

# சடலங்கள் மீதேறி ஆட்சியை கவிழ்க்க மாட்டோம்

## ஐ.தே.க தெரிவிப்பு: இரு வாரங்களுக்கு நாட்டை முடக்க கோரிக்கை

நாட்டை இரு வாரங்களுக்கு முடக்க வேண்டுமென அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ள ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, சடலங்களின் மீதேறிய ஆட்சியைக் கைப்பற்றும் எண்ணம் ஐ.தே.கவிடம் இல்லை எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், மக்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்கே அரசாங்கத்தின் தவறுகளை சுட்டிக்காட்டுவதாகவும், மாறாக சடலங்களுக்கு மத்தியில் ஆட்சியை பிடிப்பதற்காக அல்ல எனவும் தெரிவித்த அவர். நாட்டு மக்களைப் பாதுக்காப்பதற்கு அரசாங்கம் புத்திசாதுரியமாகச் செயற்பட வேண்டும். ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியின்போது மக்கள் கைகளில் பணம் இருந்தது. ஆனால், ஆட்சிக்கு வரும்போதெல்லாம் மக்களின் பொக்கட்டுகளில் உள்ள பணத்தை பொதுஜன பெரமுன திருடியது என்றார்.



கடந்த ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கத்தின்போது அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருக்காவிட்டால், அரச ஊழியர்கள் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டிருக்கும்.

2020ஆம் ஆண்டுவரையில் எமது அரசாங்கம் ஆட்சியில் இருந்திருந்தால் அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு வழங்கப்பட்டிருக்கும் எனவும் தெரிவித்தார்.

நாட்டை இரு வாரங்களுக்கு சுகாதார தரப்பினர் முடக்க வேண்டுமென அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ள போதிலும், மக்கள் உயிரிழக்கும் வரையில் அரசாங்கம் அதனை வேடிக்கைப் பார்க்கிறது எனவும் கூறியுள்ளார்.

நாட்டை இரு வாரங்களுக்கு முடக்கி, வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்கி, கொரோனா வைரஸ் பரவலை அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.



### லக்ஷ்மன் கதிர்காமர் ஓர் உதாரணபுருஷர்


இன வேறுபாடுகளின்றி தாய்நாட்டுக்காக சேவை புரிவதில் உதாரணபுருஷராக லக்ஷ்மன் கதிர்காமர் திகழ்ந்தாரென பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், கொலை செய்யப்பட்டு 12 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு, பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் அவரது திருவுருவச் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினார்.

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், இன வேறுபாடுகளின்றி தாய்நாட்டுக்காக சேவை புரிவதில் முன்னுதாரணமாக லக்ஷ்மன் கதிர்காமர் திகழ்ந்தார். சர்வதேச ரீதியில் தாம் செல்வாக்குச் செலுத்திய சட்டத்துறையை கைவிட்டு சவாலான நேரத்தில் தாய்நாட்டுக்காக முன்வந்து பணியாற்றியதாகவும், அதற்காக தனது உயிரையும் அர்ப்பணித்ததாகவும் தெரிவித்தார்.



### எண்ணெய் சோதனை



மொத்த, சில்லறை விலைகளுக்கு விற்பனை செய்யப்படும் தேங்காய் எண்ணெய் வகைகளை, தெங்கு அபிவிருத்தி அதிகார சபை, நுகர்வோர் அதிகார சபையுடன் இணைந்து கொழும்பில் நேற்று (12) சோதனை நடத்தியது.

போக்குவரத்து நெரிசலுக்கு

### விசேட தீர்வு



கொழும்பு உட்பட நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நிலவும் போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாக, விசேட அபிவிருத்தித் திட்டமொன்றை ஆரம்பிக்க உள்ளதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதன்படி, அந்தந்த நகர வீதிகள், அதிக நெரிசல் உள்ளதாக அடையாளம் காணப்பட்ட பிரவேச வீதிகள், மாற்று வீதி கட்டமைப்பு என்பவற்றை அபிவிருத்தி செய்யவும் பாலங்களை நிர்மாணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நெடுஞ்சாலை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் நேற்று (12) கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், இந்த விசேட வீதி அபிவிருத்தித் திட்டம் கொழும்பு, கண்டி, காலி, குருநாகல், கம்பஹா நகரங்களை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்படுமெனவும், எனினும் ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தினசரி வேலை நேரத்தின் தொடக்கத்திலும் முடிவிலும், இந்த நகரங்களில் பல மணிநேரம் ஏற்படும் போக்குவரத்து நெரிசலால் அன்றாட வாழ்க்கைக்கு பெரும் தடை ஏற்படுகிறது எனவும் அமைச்சர் இதன்போது சுட்டிகாட்டியுள்ளார்.



### பதவியைத் துறந்தார் உபதவிசாளர் இரவீந்திரன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உபதவிசாளராக பதவி வகித்த தி.இரவீந்திரன், தனது இராஜினாமா கடிதத்தை பிரதேச சபை செயலாளரிடமும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடமும் நேற்று (12) கையளித்திருந்தார்.

இலங்கை தமிழரசு கட்சி சார்பாக கரைதுறைப்பற்று பிரதேச சபையில் இதுவரை காலமும் உபதவிசாளர் பதவி வகித்து வந்த இவர் சுயவிருப்பின் பெயரில் பதவியை இராஜினாமா செய்வதாகவும் தொடர்ந்தும் சபையின் உறுப்பினராக கடமையாற்றுவேன் என்பதையும் எழுத்து மூலம் சமர்ப்பித்துள்ளதுடன் சபைக்கும் அறிவித்துள்ளதாகத் தெரிவித்தார்.

கட்சிக்கும் செயலாளரின் அறிவித்தலுக்கும் தலைவணங்கி தனது பதவியினை இராஜனாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் நேற்றைய (12) அமர்வு தவிசாளர் க.விஜிந்தனின் தலைமையிலான தொடக்க நிகழ்வுடன் உப தவிசாளரான தி.இரவீந்திரனின் தலைமையிலேயே நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

### சீமெந்துக்குத் தட்டுப்பாடு

க.விஜயரெத்தினம்

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மருதமுனை, கல்முனை, களுவாஞ்சிகுடி, வெல்லாவெளி, வவுணதீவு, நாவிதன்வெளி போன்ற பிரதேசங்களில் சீமெந்துக்கு தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்கள், கட்டட ஒப்பந்தகாரர்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.



பொதுமக்கள் தங்கள் காணிக்குள் அமைக்கப்படும் கட்டட வேலைகளுக்கும், ஒப்பந்த வேலைகளுக்கும் சீமெந்துப் பக்கெற்றுகளை கடைகளில் கொள்வனவு செய்யமுடியாத நிலையில் திண்டாடுவதாக கவலை தெரிவிக்கிறார்கள்.

1010 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு மூடை சீமெந்து, 1050 ரூபாய்க்கு விற்கப்படுகின்றது. பொருள்களின் விலை மலைபோல் உயர்ந்துள்ள நிலையில் வறுமைப்பட்ட மக்கள் புதிதாக கட்டடவேலைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் இருப்பதாகவும் கவலை தெரிவிக்கின்றார்கள்.

மடு திருவிழா

### வெளியாருக்குத் தடை; 150 பேருக்கு மட்டுமே அனுமதி

எஸ்.றொஷேரியன் லெம்பேட்

மருதமடு அன்னையின்ஆவணி மாத பெருவிழாவில் கலந்துகொள்ள பாதயாத்திரையாகவோ அல்லது போக்குவரத்து மூலமோ வேறு மாவட்டங்களில் இருந்து மடுத் திருதலத்துக்கு வருகை தருபவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், தேசிய திருவிழாக்களில் ஒன்றான மருதமடு அன்னையின் ஆவணி மாத பெருவிழாவானது இம்மாதம் 15 ஆம் திகதி கொண்டாடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. மன்னாரில் பரவி வரும் கொரோனா தொற்றை கவனத்தில் கொண்டு, இவ்விழா தொடர்பில் சில முடிவுகளை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்படி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைகளுக்கு அமைய, மடு திருவிழாவுக்கு இம்முறை 150 பக்தர்கள் மட்டுமே அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும்,



பாதயாத்திரையாக அல்லது போக்குவரத்து மூலமோ வேறு மாவட்டங்களில் இருந்து மடுத் திருதலத்துக்கு வருவோரை பாதுகாப்புத் துறையின் உதவியோடு தடுத்து நிறுத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

சுகாதார நடை முறைகளை முறையாக பின்பற்றுவதன் மூலம் இறைவன் சித்தம் கொண்டால் அடுத்த வருடம் நாம் எல்லோரும் ஒன்றிணைந்து மிகச் சிறப்பாக கொண்டாடக் கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதை கவனத்தில் கொண்டு, இம்முறை மன்னார் மாவட்ட மக்களுடன் அதுவும் மட்டுப்படுத்தப்பட்ட 150 பக்தர்களுடன் கொண்டாட அனைவரினதும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

பெரும்பான்மையானோர்

### நாட்டை முடக்க வேண்டாம் என்று கோருகின்றனர்



அலுவலக பணிகளுக்காக தேவையானவர்களை மாத்திரம் வேலைக்கு அழைக்க வேண்டுமென நிறுவனத் தலைவர்களிடம் கோரிக்கை விடுப்பதாகத் தெரிவித்துள்ள இராணுவத் தளபதி, நாட்டை முடக்க வேண்டாமென்றே பெரும்பான்மையானோர் கோரிக்கை விடுப்பதாகவும் தெரிவித்தார்.

நிகழ்வுகளில் கலந்து கொள்வதையும் பொதுமக்கள் முற்றாகத் தவிர்க்க வேண்டுமெனவும், அலுவலகங்களில் பணியாளர்களில் தான் விரும்பியதுபோல வேலைக்கு அழைத்தால், கொரோனா வைரஸ் வேகமாகப் பரவும் எனவும், பணிக்குத் தேவைப்படுவோரை மாத்திரம் அலுவலகங்களுக்கு அழைப்பது நிறுவன தலைவர்களின் பொறுப்பு எனவும் தெரிவித்துள்ளார்.

சில நிறுவனங்கள் அதிகளவான ஊழியர்களை பணிக்கு அமர்த்தி வருவது தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கும் இராணுவத் தளபதி, தற்போது பேச வேண்டியது நாட்டை முடக்குவது பற்றியல்ல; மாறாக, நாட்டை முடக்காத வகையில் செயற்படுவது, பொதுமக்கள் அனைவரதும் பொறுப்பு.

நாட்டை முடக்க வேண்டாமென்றே பெரும்பான்மையானோர் கோரிக்கை விடுத்து வருவதாகவும், சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களை பொதுமக்கள் பின்பற்ற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

சிறுமி துஷ்பிரயோக விவகாரம்:

### தந்தை, மகன் உள்ளிட்ட ஐவருக்குப் பிணை

15 வயதுடைய சிறுமியை துஷ்பிரயோகம் செய்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஐவருக்கும் குருநாகல் நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

குறித்த சிறுமி துஷ்பிரயோக ப்படுத்தப்படவில்லை என சட்ட வைத்திய அதிகாரி நீதிமன்றத்துக்கு வழங்கிய அறிக்கை, கைது செய்யப்பட்டிருந்த சந்தேகநபர்களுக்காக ஆஜரான சட்டத்தரணியின் வாதங்களை கருத்திற்கொண்டே சந்தேகநபர்களான தந்தை, மகன் உள்ளிட்ட ஐவரையும் தலா ஒரு இலட்ச ரூபாய் சரீரப் பிணையில் விடுதலை செய்ய குருநாகல் பிரதான நீதவான் பந்துல குணவரத்ன உத்தரவிட்டுள்ளார்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய மதுரங்கொட பொலிஸார் இணைந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் கடந்த மாதம் 21ஆம் திகதியன்று ஐவர், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சிறுமி வழங்கிய வாக்குமூலத்துக்கு அமையவே இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்டிருந்த சந்தேகநபர்கள் அனைவரும் 5 வயதிலிருந்து 14 வயது வரையில் அச்சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியிருப்பது தெரியவந்துள்ளதாக முறைப்பாட்டாளர்கள் தொடர்பில் ஆஜரான மதுரங்கொட பொலிஸார் நீதிமன்றத்துக்கு தெரிவித்திருந்தனர்.

எனினும், சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படவில்லை என குருநாகல் போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி ஹேமந்த விக்கிரமசிங்க நீதிமன்றுக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்திருந்தார்.

இதனை தொடர்ந்து சந்தேகநபர்களை பிணையில் விடுதலை செய்த நீதவான், பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் சிறுமியையோ அல்லது சிறுமியின் குடும்பத்துக்கோ சந்தேநபர்கள் அழுத்தங்களை வழங்கினால், பிணை இரத்து செய்யப்படும் எனவும் எச்சரித்துள்ளார்.

### ஊ.சே.நி விசாரணை கூடங்கள் மூடப்பட்டன

கொழும்பு 01, சேர் பரோன் ஜயதிலக்க மாவத்தையில் லொயிட்ஸ் கட்டடத்தில் உள்ள, ஊழியர் சேமலாப நிதி (EPF) இன் பொது தொடர்பு, விசாரணை கூடங்கள் ஆகியன, எதிர்வரும் 20ஆம் திகதி வரையிலும் மூடப்பட்டுள்ளன.

அங்கு பணியாற்றிய அப்பிரிவின் பணியாளர்கள் சிலருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்தே அந்த கூடங்கள் மூடப்பட்டுள்ளன.

கேட்கப்படாத கேள்விகளுக்காக பாராளுமன்றம்

### இரு நாள் கூடுகிறது

பல்வேறு காரணங்களால் கேட்கப்படாதுள்ள 68 வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக செப்டெம்பர் 06ஆம், 27ஆம் திகதிகளில் காலை 10 முதல் மாலை 4.30 மணி வரையில் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், ஒகஸ்ட் 17, 20ஆம் திகதிகளிலும் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு தீர்மானித்துள்ளது.

இதன்படி 17ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குக் கூடவுள்ள பாராளுமன்ற அமர்வில் கொரோனா வைரஸ் தொற்று (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டமூலம், பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான 6 கட்டளைகள் உள்ளிட்டவை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

18ஆம் திகதி பாராளுமன்ற அமர்வின்போது இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டமூலம், உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான 03 கட்டளைகள், மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்கள் உள்ளிட்டவை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.

LNewspapers Viber Community

# அம்பாறையில் கொரோனா தீவிரம்

## ஒரே நாளில் 411 தொற்றாளர்கள்

எம்.எஸ்.எம்.ஹனீபா

அம்பாறை மாவட்டத்தில் தற்போது கொரோனாத் தொற்றுப் பரவல் தீவிரமடைந்து வருகின்றது. நேற்று முன்தினம் (11) மாத்திரம் இம்மாவட்டத்தில் 411 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும், இதுவே இம்மாவட்டத்தின் உச்ச எண்ணிக்கை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மக்கள் அலட்சியப் போக்குடன் செயற்படாது, மிகக் கவனமானதும் இறுக்கமானதுமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவது காலத்தின் தேவையாகும் என கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் தெரிவித்தார்.



# வலையில் சிக்கும் பியர் ரின்கள்

## கிளி. குளத்தின் அவலம்

நடராசா கிருஸ்ணகுமார்



சாராயப் போத்தல்களாலும் பியர் ரின்களாலும் நிரம்பி வழியும் குளமாக கிளிநொச்சி குளம் காணப்படுகின்றது.

இக்குளத்தின் பகுதியில் பெருமளவு மதுப்பிரியர்கள், தாங்கள் அருந்தும் சாராய மற்றும் பியர் ரின்களை குளத்தில் வீசுவதால் குளத்தில் எந்நேரமும் சாராய, பியர் ரின்கள் மிதப்பதைக் காணலாம்.

நன்னீர் மீன்பிடிக்காக வலை விரிக்கும் மீன் பிடியாளர் ஒருவரின் வலையில் மீன் அகற்றப்படுகின்றதோ இல்லையோ, பியர் ரின்களும் சாராயப் போத்தல்களும் வலையில் சிக்குகின்ற அவலம் தொடர்கின்றது.

கிளிநொச்சி குளம் சுற்றுலா மையமாக உருவாக உள்ளது. தற்போது இரணைமடுக் குளத்தில் இருந்து இக்குளத்துக்கு நீர் வழங்கப்பட்டு, கிளிநொச்சி நகரத்துக்கான குடிநீர் வழங்கலுக்காக அருகில் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானங்கள் எல்லாம் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், கிளிநொச்சி நகரத்தின் கழிவுகள் இக்குளத்தின் சூழலில் கொட்டப்படுவதும் குளத்துக்குள் பியர் ரின்கள், சாராயப் போத்தல்கள் மிதப்பதைத் தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பாதுகாப்புப் படையினர் வசம் உள்ள காணிகள்

# விரைவில் விடுவிப்பு



## மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் தெரிவிப்பு

எம்.எஸ்.எம்.நூர்தீன், வா.கிருஸ்ணா

மட்டக்களப்பில் பாதுகாப்புப் படையினர் வசம் உள்ள காணிகளில் பெரும்பாலானவை விரைவில் விடுவிக்கப்படவுள்ளதாக, மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் கே.கருணாகரன் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது, பொலிஸார், படையினர் வசமுள்ள அரச, தனியார் காணிகளை மீளக் கையளிப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல், மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் (11) நடைபெற்றுள்ளது.

இதன்போதே, மாவட்டச் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலின் போது, காணிகளை மீளக் கையளித்து மக்களது இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்திக் கொள்வது தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது, தனியார் காணிகள், கட்டடங்கள், அரச காணிகள், அரச கட்டடங்கள், கோவில்கள், பாடசாலைகள், கிராம அபிவிருத்திச் சங்க கட்டடங்கள் போன்றவற்றில் சில இன்னமும் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படாமை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மண்முனை வடக்கு, மண்முனைப்பற்று, களுவாஞ்சிகுடி, வெல்லாவெளி, பட்டிப்பளை, கோறளைப்பற்று மத்தி, கிரான், வாகரை பிரதேச செயலாளர் பிரிவுகளில் இன்னமும் தனியார், அரச காணிகளில் படையினர் நிலைகொண்டிருப்பதால், மக்களது இயல்பு வாழ்வில் தடங்கல்கள் இருப்பதாகப் பிரதேச செயலாளர்களால் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பாதுகாப்புப் படையினர் தம்வசம் உள்ள காணிகளில் பெரும்பாலான பகுதினை இவ்வருட இறுதிக்குள் உரிய நபர்களிடம் வழங்கவுள்ளதாக மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

# ஏறாவூர் படுகொலை; 31 ஆவது நினைவு தினம்

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

1990ஆம் ஆண்டு ஒகஸ்ட் 11 ஆம் திகதி நள்ளிரவு ஏறாவூர் நகரிலும் அதனை அண்டிய கிராமங்களிலும் வீடுகளில் உறங்கிக் கொண்டிருந்தோர் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இத்தாக்குலில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் 121 பேரின் நினைவாக 31ஆவது நினைவுப் பிரார்த்தனை நிகழ்வு, படுகொலை செய்யப்பட்டவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள காட்டுப் பள்ளிவாசலில் நேற்றைய தினம் (12) நடைபெற்றது.

ஏறாவூர் சுஹதாக்கள் நினைவுப் பேரவையால், சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில், படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள், காயமடைந்தோர், மார்க்க அறிஞர்கள், சமூக சேவைச் செயற்பாட்டாளர்கள், முக்கியஸ்தர்கள் ஊரப் பிரமுகர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டதாக பேரவையின் தலைவர் எம்.எல். அப்துல் லத்திப் தெரிவித்தார்.



யாழ்.பல்கலைக்கழகத்தில்

# கொரோனா எச்சரிக்கை

## பணிக்கு வரவேண்டாம் என ஊழியர்களுக்கு அறிவிப்பு

சண்முகம் தவசீலன், எஸ்.நிதர்ஷன்

கொரோனா தொற்றுப் பரவல் தீவிரமடையும் நிலையில், யாழ். பல்கலைக்கழக ஊழியர்களை பணிக்குச் செல்லாது வீடுகளில் பாதுகாப்பாக இருக்குமாறும், கல்விசார் ஊழியர்களின் செயற்பாடுகள் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கை ஆராயப்படவுள்ளதாகவும் ஊழியர் சங்கத்தின் தலைவர் த.சிவரூபன் அறிவித்துள்ளார்.

இது குறித்து ஊழியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, பெரும் அபாயமாக மாறிவரும் கொரோனா சூழலில், யாழ். பல்கலைக்கழக பணியாளர்களை பெருந்தொற்று அபாயத்திலிருந்து பாதுகாக்கும் முகமாக, பணியாளர்கள் பணிக்கு வருதல் தொடர்பில் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரதும் கருத்துகள் அறியப்பட்டன.




அதனடிப்படையில், இன்று (நேற்று) பணியாளர்கள் அனைவரும் பணியிடங்களுக்குச் செல்லாமல், பாதுகாப்பாக வீடுகளில் இருக்குமாறு அறிவுத்தப்படுகின்றனர்.

அத்தோடு, நிர்வாகத்தினருடன் கலந்துரையாடிய ஏனைய விடயங்கள் தொடர்பில் பின்னர் அறியத்தரப்படும்.

எங்களுடன் கடந்த வெள்ளிக்கிழமை வரை நடமாடித் திரிந்த ஓர் ஊழியர் கொரோனாவால் மரணமடைந்த நிலையிலும், கிளிநொச்சி வளாகம், விஞ்ஞான பீடம், மருத்துவ பீடம், துணை மருத்துவ கற்கைகள் பீடம், இந்து கற்கைகள் பீடம், இராமநாதன் மண்டப நிர்வாக தொகுதி, பராமரிப்பு கிளை, பாற்பண்ணை மாணவர் விடுதி ஆகிய இடங்களில் பணிபுரியும் பணியாளர்கள் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் அவர்களுடன் நெருக்கமாகப் பழகியவர்கள் எவ்வித பொறுப்புமற்று பணிக்கு வரும் நிலையிலும், ஏற்பட்டுள்ள அபாய நிலையை கருத்தில்கொண்டு இவ் அவசர முடிவை எடுக்க நேரிடுகிறது என்றும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கடல் அட்டைகளை பிடித்த மூவர் கைது



கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, கல்குடா கடலில் சட்டவிரோதமாக கடல் அட்டைகளைப் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள் மூவர், வாகரை கடற்படையினரால் நேற்று முன்தினம் (11) கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாகரை கடற்படைப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலை அடுத்தே, இக்கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இம்மீனவர்கள் பயன்படுத்திய படகு, 65 கடல் அட்டைகள், ஒட்சிசன் சிலிண்டர் மற்றும் ஏனைய கடற்றொழில் உபகரணங்கள் ஆகியவற்றைக் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள், கல்குடா பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் எனவும், இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

குட்டிசுவாமியின் குருபூஜையில்

# பக்தர்களுக்கு அனுமதி மறுப்பு

வி.ரி.சகாதேவராஜா

ஸ்ரீ போகரின் அவதாரமாகிய ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமியின் 70ஆவது குருபூஜை தினமான நாளை (14 ) மிகுந்த கட்டுப்பாடுகளுடன் யாகமும் குருபூஜையும் மாத்திரமே நடைபெறவுள்ளன. கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக இன்றும் (13), நாளையும் (14) பக்தர்கள் கோவிலுக்கு வர அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அத்துடன், எவ்வித பூஜை, அன்னதானப் பொருள்களை கோவிலுக்கு வழங்க முடியாது எனவும், அதேபோன்று எவ்வித பிரசாதமும் வெளியில் எடுத்துச்செல்லவும் முடியாது எனவும், கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.









## கொடியேற்றத்துக்கான ஆயத்தம்

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மகோற்சவ பெருவிழாவை முன்னிட்டு, சம்பிரதாய பூர்வமாக கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வும் வரவேற்பு வளைவில் கொடி கட்டும் நிகழ்வும், நேற்று (12) நடைபெற்றன. இன்று (13) காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் நல்லூர் கந்தசுவாமி கோவிலின் மகோற்சவப் பெருவிழா, தொடர்ந்து 25 நாள்கள் இடம்பெறவுள்ளது.

(படங்கள்: எம். றொசாந்த்)

வீட்டில் இருந்த

# மனைவி, பிள்ளைகளை காணவில்லை

## கணவன் முறைப்பாடு



க. அகரன்

வீட்டிலிருந்த தனது மனைவி, இரண்டு பிள்ளைகளைக் காணவில்லை என கணவனால், வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, முதலாம் ஒழுங்கை, மகாறம்பைக் குளம் பகுதியைச் சேர்ந்த சற்குணசிங்கம் தமிழினி (வயது 32), பிள்ளைகளான டனிஸ்கா (வயது 5), கனிஸ்கா (வயது 4) என்ற மூவருமே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இவர்கள் மூவரும் கடந்த 2021.08.10ஆம் திகதி காலை வீட்டில் இருந்துள்ளனர். எனினும், வேலைக்குச் சென்ற கணவன், அன்று மாலை வீடு திரும்பிய போது, அவர்கள் வீட்டில் இருக்கவில்லை.

இதனையடுத்து, வவுனியா பொலிஸ் நிலையத்தில் கணவனால் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காணாமல் போன பெண், பிள்ளைகள் தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள், 0777111103, 0775945839 ஆகிய அலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி, தகவல் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

70 இலட்சம் பெறுமதியான

# மருத்துவ உபகரணங்கள் வழங்கி வைப்பு

எம்.எஸ்.எம். ஹனீபா

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையிலுள்ள கொரோனாத் தடுப்பு சிகிச்சை நிலையத்துக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமால் சுமார் 70 இலட்சம் ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள், நேற்று முன்தினம் (11) வழங்கி வைக்கப்பட்டன.

நாட்டில் தற்போது நிலவும் கொரோனாத் தொற்றின் தீவிர தன்மையைக் கருத்தில்கொண்டு, இவ் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



LK Newspapers Vibe Community



கடும் மழையால்

# தத்தளிக்கும் மலையகம்

**வான்கதவுகள் திறப்பு; பொது மக்களுக்கு எச்சரிக்கை**





■ கே.சுந்தரலிங்கம், இரா.யோகேசன், செ.தி. பெருமாள், எஸ்.கிருஸ்ணா, எஸ்.கணேசன், சுதத் எச்.எம்.ஹேவா

மலையகத்தின் பல பிரதேசங்களிலும் கடந்த இரண்டு நாள்களாக கடும் மழை பெய்துவருவதால், பிரதேசங்கள் பல நீரில் மூழ்கியுள்ளன.

ஆறுகள், நீரோடைகள் என்பன பெருக்கெடுத்துள்ளதுடன், நீர்த்தேக்கங்களின் நீர் மட்டமும் உயர்ந்துள்ளன.

இதனால் மவுசாகலை நீர்த்தேக்கத்தின் மூன்று வான்கதவுகளும் ,கெனியோன் நீர்த்தேக்கத்தில் இரண்டு வான் கதவுகளும் நேற்று (12) காலை திறக்கப்பட்டன.

காசல்ரீ நீர்த்தேக்க பகுதியில் நேற்று (12) காலை 70 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளன. இதனால் காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் உயர்ந்து வான் பாயும் அளவை எட்டியுள்ளது.

இதேவேளை, நோர்ட்டன்பிரிஜ் பகுதியில் அமைந்துள்ள விமல சுரேந்திர நீர்த்தேக்கப்பகுதியில் கடுமையான மழை பெய்து வருவதானால் அந்த நீர்த்தேக்கத்தில் ஆறு கதவுகள் ஊடாக நீர் வான்பாய்கின்றன.


எனவே, நீர்த்தேக்கத்துக்கு கீழ் தாழ் நிலப்பகுதியில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வட்டவளை நகரத்துக்கு அருகிலுள்ள சில வீதிகளும் அம்பகமுவ பிரதேசமும் நீரில் மூழ்கியுள்ளன.

அத்துடன், கினிகத்தேனை மற்றும் கித்துல்கல ஆகிய பகுதிகளில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

கித்துல்கலை பிரதேசத்தில் நேற்று (12) பகல் மண்மேடு ஒன்று சரிந்து விழுந்ததால், அவ்வீதியுடனான போக்குவரத்து தடைப்பட்டாலும் சிறிது நேரத்தில் வழமைக்குத் திரும்பியது.

இதேவேளை,ஹட்டன்- கொழும்பு பிரதான வீதியின் கினிகத்தேனைப் பகுதியில் மண்மேடொன்று சரிந்து விழுந்துள்ளதுடன் மரமொன்று ஓட்டோ மற்றும் லொறி ஒன்றின் மீது முறிந்து விழுந்துள்ளது. இதனால் எவருக்கும் எவ்விதப் பாதிப்பும் ஏற்படவில்லை. அத்துடன், இரத்தினபுரி மாவட்டத்தின் களுகங்கை மற்றும் குக்குலேகங்கை என்பவற்றின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளதால், சிறியளவு வெள்ளம் ஏற்படலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கொரோனா செய்தித் துளிகள்

1. நாவுல பிரதேச சபையால் நிர்வகிக்கப்படும் நாவுல ஆயுர்வேத சிகிச்சை நிலையத்தின் பிரதான வைத்திய அதிகாரிக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதால், குறித்த வைத்தியசாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (இந்திக அருணகுமார)

2. மொனராகலை மாவட்டத்தில் நேற்று (12) புதிதாக 274 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர் என, மொனராகலை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் துஷித அத்தநாயக்க தெரிவித்தார். (சுமணசிறி குணதிலக)

3. ஹட்டனில் இயங்கிய மூன்று நிதி நிறுவனங்களின் பணியாளர்கள் சிலருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதால், குறித்த நிறுவனங்களை தற்காலிகமாக மூட நடவடிக்கை எடுத்ததாக சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (சுதத். எச்.எம்.ஹேவா)

4. பசறை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளையடுத்து, நேற்று 48 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதென, பசறை பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர் எஸ்.ஜெயக்குமார் தெரிவித்தார். (எம்.செல்வராஜா)

5. மாத்தளை நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனைகளில் 60 சதவீதமானவர்களுக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதென, மாத்தளை மாநகர சபையின் பிரதி நகராதிபதி அமில நிரோசன தெரிவித்தார். (மஹேஸ் கீர்த்திரத்ன)

6. இராகலை பொதுச் சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தினமும் 15 24 வரை தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதால், மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு, இராகலை சுகாதாரப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஆ.ரமேஸ்)

தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்ட

# 18 பேருக்கு பிணை

■ சேஹன் செனவிரத்ன

கண்டி மத்திய சந்தைக்கு முன்பாக அதிபர்- ஆசிரியர் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து, கொழும்பு வரை நடைபயணத்தை மேற்கொண்ட நிலையில், கைதுசெய்யப்பட்ட பிக்குகள் உள்ளிட்ட 18 பேரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள், கண்டி நீதவான் நிதிமன்றில் நேற்று முன்தினம் (11) ஆஜர்படுத்தப்பட்ட போது, அவர்களை தலா ஒரு இலட்ச ரூபாய் சரீரப் பிணையில் விடுதலை செய்யுமாறு, கண்டி மேலதிக நீதவான் எம்.டி. ஷெரிப்டீன் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், அவர்களை மீண்டும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையிலும் கொரோனா தொற்று பரவும் வகையிலும் ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ், கண்டி பொலிஸ் தலைமையகத்தால் பீ அறிக்கை ஊடாக நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட காரணங்களை ஆராய்ந்த நீதவான், சந்தேகநபர்களுக்குப் பிணை வழங்கியுள்ளார.

உதவி கல்விப் பணிப்பாளருக்கு

# தேசப்பந்து விருது

■ பி.கேதீஸ்




நுவரெலியா கல்வி வலயத்தின் ஆரம்பக்கல்விக்குப் பொறுப்பான உதவி கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வராஜா, இலங்கை நாட்டின் மூன்றாவது அதியுயர் கௌரவ விருதான தேசபந்து விருதை அண்மையில் பெற்றுக்கொண்டார்.

2004ஆம் ஆண்டில் சிறந்த அதிபர்களுக்கான வித்யா கீர்த்தி ஸ்ரீ விருதை பெற்றுக்கொண்ட இவர், அகில இலங்கை சமாதான நீதவான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தேசப்படம் தேடிய சிறுவன் மாயம்

■ மெய்யன்



பன்விலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்பீலி தோட்டத்தைச் சேர்ந்த 16 வயதான க.பிரபா கௌசல்யன் என்ற சிறுவன், 7ஆம் திகதியிலிருந்து காணாமல் போயுள்ளார். என பன்விலை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் வேளையில், இவர் கற்றல் வேலைக்காக தேசப்படம் வாங்க பன்விலை நகருக்குச் சென்ற போதே, காணாமல் போயுள்ளதாக, இவரது தந்தை தெரிவித்துள்ளார்.

எனவே, இச் சிறுவன் தொடர்பான தகவல் அறிந்தவர்கள், பன்விலை பொலிஸாருக்கோ அல்லது 071-9043533 இலக்கத்துக்கோ அறியத்தருமாறு, பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



கொட்டகலையில் திருட்டு;

# காட்டிக்கொடுத்த சிசிடிவி கமெரா

■ கே.சுந்தரலிங்கம்

கொட்டகலை நகரில் திருட்டு சம்பவத்தில் ஈடுப்பட்ட இருவர், சிசிடிவி கமெராவில் பதிவான காணொளிகளை அடிப்படையாக வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் என, திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மாதம் 10ஆம் திகதி இரவு, கொட்டகலை நகரில் உள்ள வர்த்தக நிலையமொன்றின் உரிமையாளர் வெளியில் சென்ற போது, குறித்த இருவரும் கடைக்குள் புகுந்து கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

பின்னர், சந்தேகநபர்கள், ஓட்டோவில் ஏறி, ஹட்டன் நோக்கிச் செல்லும் காட்சிகளும் ஓட்டோ சாரதியுடன் மற்றுமொருவர் உரையாடும் காட்சிகளும் பதிவாகியுள்ளன.

இந்த ஆதாரங்களை அடிப்படையாக வைத்து முன்னெடுத்த விசாரணைகளுக்கமைய, நேற்று முன்தினம் (11) மாலை சந்தேகநபர்களை கைதுசெய்ததாகவும், அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சர்வமதப் பிரார்த்தனைக்கு அழைக்கும்

# உதவும் கரங்கள் அமைப்பு

■ பி.கேதீஸ்




இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் ஏற்பாட்டில், சர்வமதப் பிரார்த்தனை ஒன்று இன்று (13) இரவு 8.01 மணியிலிருந்து 8.06 வரையிலான 5 நிமிடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் பரவியுள்ள பெருந்தொற்றாகிய கொவிட் 19 கொரோனா வைரஸ் தொற்றினால், உயிர்நீத்தவர்களுக்கு ஆத்மசாந்தி வேண்டியும் தமது உறவுகளை இழந்து வாடுபவர்களுக்கு மன அமைதியையும் ஆராக்கியமும் கிடைப்பதற்காகவும் பிரார்த்தனையில் ஈடுபடுவோம் என இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர், நிர்வாகக் குழுவினர் மற்றும் அங்கத்தவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்

சமையல் எரிவாயுக்கு

# நுவரெலியாவிலும் தட்டுபாடு

■ ஆ.ரமேஸ்

நுவரெலியாவில் சமையல் எரிவாயுக்கான தட்டுப்பாடு அதிகமாக நிலவுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

சந்தையில் சமையல் எரிவாயுக்கு தட்டுப்பாடு இல்லை தாராளமாக கிடைக்கும் என அரசாங்கம் தெரிவித்துள்ள போதிலும், கடந்த ஒருவாரத்துக்கு அதிகமாக, நுவரெலியாவில் சமையல் எரிவாயுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக நுகர்வோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதேநேரத்தில் கடந்த ஒரு வராத்துக்கு முன், நுவரெலியாவில் லிட்ரோ (12.5) எரிவாயு சிலிண்டர்கள் வழமையாக விற்பனை செய்யும் முகவர்கள் கடைகளில் இருந்து பெற்றுக்கொள்ள கூடியதாக இருந்தது. ஆனால், தற்போது அதற்கும் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இரத்தினக்கல் வியாபாரிகளாக வந்த

# கொள்ளையர்கள் கைது

■ ஏ.ஜி.எம்.பாயிஸ்

இரத்தினபுரி, குருவிட்ட, எஹலியகொட மற்றும் அவிசாவளை ஆகிய பிரதேசங்களில், கொள்ளைகளில் ஈடுபட்டு வந்த சந்தேகநபர்கள் இருவரை, பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குருவிட்ட மற்றும் எஹலியகொடைப் பிரதேசங்களில் இருந்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களுள் ஒருவர், எஹலியகொடை பிரதேசத்தில் இரத்தினக்கல் வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாகப் பாசாங்கு செய்து, மற்றைய சந்தேகநபரை கொள்ளைச் செயற்பாடுகளுக்கு வழிநடத்தி வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

கடந்த சில தினங்களாக குறித்த பிரதேச ங்களில் இடம்பெற்றுள்ள பல இலட்சம் ரூபாய் பெறுமதியான இரத்தினக்கல் மற்றும் உபகரணங்கள் திருட்டுகளுடன் சந்தேகநபர்களுக்கு தொடர்பிருப்பதாக தெரிவித்துள்ள குருவிட்ட பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கேகாலையில்

# இரத்ததான நிகழ்வு

■ என்.ஆராச்சி

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் மை ஹார்ட் சமூக அமைப்பு என்பன இணைந்து, கேகாலையில் இரத்ததான நிகழ்வொன்றை இந்த மாதம் 15ஆம் திகதி ஏற்பாடு செய்துள்ளன.

கேகாலை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இரத்ததான நிகழ்வு, மாலை 4 மணிவரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இரத்ததானம் வழங்க முன்வரும் கொடையாளிகள், தமது தேசிய அடையாள அட்டையுடன் வருகை தருமாறு, ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



தீப்பரவலால்

# 20 ஏக்கர் எரிந்து சாம்ராகியது

■ சுமணசிறி குணதிலக

கொஸ்லாந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கம்பஹா ஒப்பீல்ட் வனத்தில் ஏற்பட்ட தீப்பரவலால், 20 ஏக்கர் வனம் எரிந்து சாம்பராகியுள்ளது.

காட்டிலுள்ள மிருகங்களை வேட்டையாடும் நோக்கில் விஷமிகளால் தீவைக்கப்பட்டிரருக்கலாம் என, கொஸ்லாந்தை பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

அத்துடன், பொலிஸார், வனப் பாதுகாப்பு அதிகாரிகள மற்றம் பிரதேசவாசிகள் இணைந்து தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

LK Newspapers Viber Community

# ‘பழைய குருடி கதவைத் திறவடி’க்கு வித்திடக் கூடாது

நாட்டிலுள்ள மிக முக்கியமான மயானங்களில், தங்களுக்கான இடங்களை உயிருடன் இருக்கும் போதே சிலர் ஒதுக்கிக்கொண்ட சம்பவங்கள், எம்மில் பலருக்கும் ஞாபகத்தில் இருக்கும். குடும்ப கல்லறை இருக்குமாயின் அதிலேயே இடம் கிடைத்துவிடும்.

ஆனால், பொது இடுக்காட்டில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டால், சடலங்களுக்கு மேல் சடலங்களைப் புதைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையே, பல இடுகாடுகளில் இடம்பெறுகின்றன.

கொரோனா வைரஸ் தொற்றுக்குப் பின்னர், மரணிக்கும் சகலரது சடலங்களும் கேட்டுக் கேட்பாரின்றி, தகனம் செய்யப்பட்டன. பச்சிளம் குழந்தை முதல், முதியவர் வரையிலும் தீயில் கருக்கப்பட்டனர். இதற்குப் பல திக்குகளில் இருந்தும் எதிர்ப்பலைகள் கிளம்பின.

குறிப்பாக, மத உணர்வுகளை மதிக்காமல் ஜனாஸாக்கள் எரியூட்டப்பட்டன. இது, சர்வதேசம் வரையிலும் பேசப்பட்டது. எனினும், தொடர்ச்சியான போராட்டங்கள், அழுத்தங்களின் பின்னர், அடக்கம் செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி, மஜ்மா நகரில் காணி ஒதுக்கப்பட்டு, அங்கு, இன, மொழி, மதம் மற்றும் பிறநாட்டவர்கள் எனப் பார்க்காது, அடக்கம் செய்யவேண்டிய சகல சடலங்களும் அடக்கம் செய்யப்பட்டன. ஏனைய சடலங்கள் தகனம் செய்யப்பட்டன.

ஒன்பது மாகாணங்களிலும் 239 தகன சாலைகள் மட்டுமே உள்ளன. உள்ளூராட்சி மன்றங்களால் நிர்வகிக்கப்படும் இந்தத் தகனசாலைகளில் பல இயங்காமல் இருக்கின்றன. இன்னும் சில பழுதுபார்ப்பதற்காகத் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

தகனசாலைகள், காஸ் அல்லது மின்சாரத்தில் இயங்குகின்றன. ஒரு தகனசாலையில் 150 சடலங்கள் எரியூட்டப்பட்டதன் பின்னர் பழுதுபார்க்க வேண்டும். கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக, கொள்ளளவை மீறி எரியூட்டியமையால், சில தகனசாலைகள் பழுதடைந்துள்ளன.

இதேவேளை, ஓட்டமாவடி, மஜ்மா நகரில் உள்ள சடலங்களை அடக்கம் செய்யும் காணிக்கு, நாளொன்றுக்கு 15 க்கும் மேற்பட்ட சடலங்கள் அடக்கம் செய்வதற்காக எடுத்துவரப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் மரணிப்போரின் எண்ணிக்கை, அதிகரித்து கொண்டே செல்கின்றது. சில நாள்களில் அக்காணியில் இடமே இல்லாமல் போய்விடும்.

காணியில் இடமில்லை; ஆகையால் எரியூட்டவே வேண்டும். காணிகளை தேடிக்கொண்டிருக்க முடியாது என்ற சாக்குபோக்குகளைக் கூறி, ‘பழைய குருடி கதவைத் திறவடி’ என்ற நிலைமை மீண்டும் ஏற்படுத்தப்படக்கூடும்.

ஆகையால், கொரோனா சடலங்களைப் புதைப்பதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும் காணிகளை ஒதுக்கிக்கொள்வது உசிதமானது. இதனூடாக, தேவையில்லாத செலவுகளை குறைக்கமுடியும். அதேநேரத்தில், உயிரிழந்த ஒரிரு மணிநேரத்தில் புதைத்துவிடலாம்.

காலந்தாழ்த்தியேனும் மதங்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்பட்டுள்ளன. ஆகையால், கடும் போராட்டங்களுக்கு மத்தியில் வென்றெடுக்கப்பட்ட உரிமையைத் தொடர்ந்து தற்காத்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு எங்களிடத்திலேயே உள்ளது.

காலந்தாழ்த்திக் கொண்டிருந்தால், தகனம் செய்வதற்கு வழிசமைத்துவிடும். ஆகையால், மஜ்மா நகர் காணிக்கு அப்பால், ஏனைய மாவட்டங்களிலும் கொரோனா சடலங்களைப் புதைப்பதற்கான காணிகளைத் தேடிக்கொள்வதற்கு வலியுறுத்த வேண்டும். அதனை இன்றிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

வெறுப்பு உணர்வு சந்தோசத்துக்கு வேட்டு. எந்த நேரமும் முகத்தைக் கோணலாக வைத்தபடி, எதையோ இழந்தபடி இருப்பவர்களை, எவர்தான் இரசித்து மகிழப் போகின்றார்கள்.

வாழ்க்கையை இரசிக்கத் தெரியாதவர்கள், எல்லாவற்றையும் கைவிட்டது போல் நடப்பதுண்டு. தொடர்ந்து துன்பங்கள், தோல்வி, நினைத்தவை நடக்காதுவிட்டால், அதிலிருந்து மீளும் வரை, சோக இருளில், தங்கள் உருவத்துடன் வெறுத்து இருப்பது, துணிச்சலற்ற நிலையைக் காட்டுகின்றது.

அவரவர் கஷ்டங்கள் அவரவர்களுக்குகே தெரியும் என்பார்கள். ஆனால், கஷ்ட, நஷ்டங்களைச் சந்திக்காதவர்கள் எவருண்டு.

பிரச்சினைகளை அப்படியே நிலையாக வைத்தபடி, அடுத்து உடன் எழுந்து களையாமல் இருப்பது தன்னைத்தான் சிதைப்பதாக அமையும். பழையதைத் துறந்து, புது வழி தேடுதலை சிரமம் எனக் கருதலாகாது. பலவீனத்துடன் வாழ்வது எழுச்சியைக் களைவது போலாகும். எழுவது சிரமம் அல்ல. சும்மா இருப்பதே கடினம்; செயற்படுவது மேல்.

பருத்தியூர் பால- வயிரவநாதன்

## கடிதங்கள்

### அரையும் குறையுமாக உடையார் வீதி

கல்முனை தமிழ்ப்பிரிவில் பிரபல வீதியான உடையார் வீதியைச் செப்பனிடும் பணிகள், முறையாக முடிவுறுத்தப்படவில்லையென பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கல்முனைப் பிரதேசத்தில் பலவருட காலத்துக்குப் பின்பு, ‘ஐ’ திட்டத்தின் கீழ், வீதி அபிவிருத்தி அதிகார சபையால் தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டு, புனரமைக்கப்பட்டு வரும் உடையார் வீதி, கடற்கரை வீதி ஆகிய வீதிகளுக்கு கார்பட் இடும் நடவடிக்கை நிறைவு பெற்றுள்ள போதும், அதன் வேலைகள் சரியாகப் பூர்த்தி செய்யப்படாமல் அரையும் குறையுமாகக் காணப்படுகின்றன. இதனால், இவ்வீதிகளால் பயணிப்போர் விபத்துகளை எதிர்கொள்வதுடன், தமது வாகனங்களைச் செலுத்த முடியாமல் அவதியுறுகின்றனர்.

குறிப்பாக, உடையார் வீதியையும் வட்டை விதானை வீதியையும் இணைக்கும் வீதி, சரியாகச் செப்பனிட்டு பூர்த்தி செய்யப்படாத காரணத்தால், சிறிய ரக வாகனங்களைச் செலுத்துவோர் வெகு சிரமங்களுக்கு மத்தியில் செல்ல வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. அத்துடன், மோட்டார் சைக்கிளில் செல்வோர் விபத்துக்கு உள்ளாகின்றனர்.

கடற்கரை வீதியில், வன்னியார் வீதியை இணைக்கும் வீதி ஆரம்பிக்கும் இடத்தில், சரியாகச் செப்பனிடாத காரணத்தால், அவ்வீதிக்கு வாகனங்களை செலுத்த முடியாத நிலையேற்பட்டுள்ளது. எனவே, இந்நிலைமைகள் குறித்து தகுதிவாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இப்பிரதேச மக்களால் எதிர்பார்க்கப்படுகின்றது.

வி.ரி. சகாதேவராஜா



இலங்கையில் சீனா: விளங்கிக் கொள்ளலும் வினையாற்றலும் – 06

# திமிங்கிலங்களின் சண்டையில் சின்ன மீன்கள்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

சீனாவில் ஆட்சிமாற்றத்தை அமெரிக்க அயலுறவுக் கொள்கை வகுப்பாளர்களில் ஒருபகுதியினர் விரும்புகிறார்கள். இன்னொரு பகுதியினர், ஆட்சிமாற்றத்தை விட, சீனா செல்வாக்குச் செலுத்தும் நாடுகளில், அமெரிக்கச் செல்வாக்கை அதிகரிப்பதன் ஊடு, சீனாவை ஓரங்கட்ட வேண்டும் என்று வாதிடுகிறார்கள்.

இந்த இரண்டு அணுகுமுறைகளுக்கும் இடையில், சீனாவை எவ்வாறு கையாளுவது என்ற வினாவுக்கான பதிலை, அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர்கள் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்க-சீன முரண்பாடு, அமைதியான முறையில் தீர்வதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு. இதற்கான பிரதான காரணம், நீண்டகாலமாக வகித்து வந்த முதன்மையான இடத்திலிருந்து இடம்பெயர, அமெரிக்கா தயாராக இல்லை. அடாவடியாகவேனும் அந்த இடத்தைத் தக்கவைக்க, அமெரிக்கா உறுதிபூண்டுள்ளது.

அமெரிக்காவின் முதன்மையான அயலுறவுக் கொள்கைவகுப்பு இதழான *Foreign Affairs*, ஜூலை, ஓகஸ்ட் மாத இதழின் தொனிப்பொருள், ‘சீனாவால் தொடர்ந்தும் உயரவியலுமா?’ (*Can China keep Rising?*). இவ்விதழில் இடம்பெற்றுள்ள கட்டுரையொன்றின் தலைப்பு, ‘ஆட்சிமாற்றம் என்பது சீனா விடயத்தில் ஒரு தெரிவல்ல’. இக்கட்டுரை சில முக்கியமான விடயங்களைச் சுட்டிக் காட்டுகிறது.

முதலாவது, சீனா, சோவியத் யூனியன் அல்ல. சீனாவைக் கையாளுவது, அமெரிக்க அயலுறவுக் கொள்கை வகுப்பாளர்களுக்கு இன்றுவரை இயலாததாகவே இருந்து வருகிறது. கெடுபிடிப்போர் உச்சத்தில் இருந்தபோது, மொஸ்கோவைக் கையாண்டது போல, பீஜிங்கைக் கையாள இயலவில்லை. இரண்டாவது, உலகெங்கும் சீனாவின் தடம், குறிப்பாக பொருளாதார வழித்தடம் எல்லா இடங்களிலும் உண்டு. இது அமெரிக்காவுக்கு மிகப் பெரிய சவாலாகும். 100க்கு மேற்பட்ட நாடுகளுடன் பிரதான வர்த்தகப் பங்காளியாக சீனா இருக்கிறது. இந்நாடுகளில் பல அமெரிக்காவுடன் நெருங்கிய உறவைக் கொண்டவை.

மூன்றாவது, அமெரிக்காவும் சீனாவும் போட்டிபோட்டாலும், ஒன்றில் ஒன்று தங்கியிருக்கின்றன.

மேற்குறித்த கட்டுரை, அமெரிக்காவின் நன்கறியப்பட்ட இன்னோர் அயலுறவுக் கொள்கை இதழான *Foreign Policy* இல், மார்ச் மாதம் ‘சீனாவில் ஆட்சிமாற்றம் மூலமே அமெரிக்காவின் வெற்றி சாத்தியம்’ என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரைக்கு எதிர்வினையாக எழுதப்பட்டதாகும். இக்கட்டுரை, சீனாவில் ஆட்சிமாற்றம் ஒன்றை ஏதோவொரு வழியில் ஏற்படுத்துவதன் மூலமே, அமெரிக்காவின் தலையாய நிலையைத் தக்கவைக்க முடியும் என வாதிடுகிறது.

இக்கட்டுரைக்கு ஆதரவாக, முன்னாள் பிரித்தானிய இராஜதந்திரி ரொஜர் கார்சைட், ஒரு கட்டுரையை கனடாவில் இருந்து வெளிவரும் *The Globe and Mail* பத்திரிகைக்கு எழுதியுள்ளார். ‘சீனாவில் ஆட்சிமாற்றம் சாத்தியமானது மட்டுமல்ல தவிர்க்கவியலாதது’ என்று தலைப்பின்கீழ், சீனாவில் ஆட்சிமாற்றத்துக்கான இரண்டு சாத்தியமான வழிகளை எதிர்வுகூறுகிறது.

முதலாவது, ஒரு சதி மூலம், ஆட்சியை அகற்றுவதற்கான வாய்ப்பு. இரண்டாவது, அடுத்தாண்டு நவம்பரில் நடைபெறவுள்ள சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில், ஜனாதிபதி ஜீ சிங்பிங்கின் பதவிக்காலத்தை நீட்டிக்காமல் தடுப்பதன் மூலம் சாத்தியமாகலாம்.

இந்த மூன்று கட்டுரைகளும், ஒரு விடயத்தில் உடன்படுகின்றன. சீனாவைக் கையாளுவது என்பது இலகுவானதல்ல. சீனாவின் உலகளாவிய செல்வாக்கைக் குறைக்காமல், தற்போதைய களநிலைவரத்தின் அடிப்படையில், சீனாவைக் கட்டுப்படுத்த இயலாது. அவ்வகையில், சீனா செல்வாக்குச் செலுத்தும் நாடுகள்மீது, தனித்தோ அல்லது சேர்ந்தோ, அமெரிக்கா தனது மேல்நிலையை நிறுவியாக வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

எனவே, சீனாவின் கொல்லைப்புறமாக இருக்கும் ஆசிய நாடுகளில், அமெரிக்கா, தனது நட்பு நாடுகளுடன் இணைந்து, சீனாவுக்கு எதிரான நகர்வுகளை மேற்கொண்டாக வேண்டும். அவ்வகையில், இலங்கையும் கவனம் பெறுகிறது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி, அதற்கான புதியதொரு வாய்ப்பை அமெரிக்காவுக்கும் மேற்குலக நாடுகளுக்கும் வழங்கியுள்ளது. ‘சீனாவின் கடன்பொறிக்குள் இலங்கை’ என்பது, தொடர்ந்து சொல்லப்படுகின்ற ஒன்று. ஆனால், உண்மை வேறுவிதமாக உள்ளது.

அமெரிக்காவும் மேற்குலகும், எப்படியாவது இலங்கையின் மோசமான பொருளாதார நிலைவரத்தை வாய்ப்பாக்கி, இலங்கையை சர்வதேச நாணய நிதியத்தின் கடன்வலைக்குள் சிக்க வைக்க முயல்கின்றன. இதன்மூலம்,இலங்கையில் செல்வாக்குச் செலுத்தும் வாய்ப்பைப் பெறவியலும் என்ற நம்பிக்கை அவர்களிடம் உண்டு. ஆனால், இன்றுவரை இலங்கை அரசாங்கம் அதற்கு இணங்கவில்லை.

சீனாவின் ‘ஒருபட்டி; ஒரு வழி’ திட்டத்தில், இலங்கையின் வகிபாகம் பல வழிகளில் வாய்ப்பாக உள்ளது. இலங்கை வங்குரோத்தை அறிவித்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், சீனாவின் உதவி இலங்கையைத் தற்காலிகமாகப் பாதுகாத்துள்ளது.

இங்கு கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில், இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு சீனா காரணமல்ல. இலங்கையின் தவறான கொள்கை முடிவுகளும் செயற்பாடுகளுமே, இலங்கையை இந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டுள்ளன.

அண்மையில், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்துகள் கவனிக்கத் தக்கவை. மேற்குலகின் ‘நம்பகரமான ஆள்’ என்று இவர் அறியப்பட்டவர். இவர், சீனாவின் ‘ஒருபட்டி; ஒரு வழி’ திட்டத்தில் இலங்கை இணைந்தது, பயன் விளைவிக்க வல்லது என்றும் சீனாவுடனான இலங்கையின் உறவு, வரலாற்று ரீதியானதும் தவிர்க்கவியலாததும் என்றார். அவரது கருத்துகளில், அடிக்கோடிடப்படுகின்ற விடயம் ஒன்றாக, இலங்கையில் சீனாவின் செல்வாக்கை, இலகுவில் இல்லாமலாக்கி விட முடியாது என்பதாகும்.

மேற்குலகக் கொள்கைவகுப்பாளர்கள், இலங்கையில் சீனாவின் செல்வாக்கை மிகுந்த அச்சத்தோடு நோக்குகிறார்கள். சீனாவின் ‘ஒருபட்டி;ஒரு வழி’ திட்டத்தில் இடம்பெற்றுள்ள ஒரு நாடு இலங்கை. பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற தென்னாசிய நாடுகளுடன் இன்னும் பல நாடுகளும் இத்திட்டத்தில் உள்ளன.

இலங்கையின் பூகோள அமைவிடம், ஏனைய தென்னாசிய நாடுகளை விட, இலங்கையை முக்கியத்துவமாக்கி உள்ளது. சீனாவின் ‘ஒருபட்டி; ஒரு வழி’ திட்டத்தை மேற்குலகு எவ்வாறு நோக்குகிறது என்பதை அறிய, கடந்தாண்டு வெளியான The Emperor’s New Road: China and the Project of the Century (*சக்கரவர்த்தியின் புதிய பாதை: சீனாவும் இந்த நூற்றாண்டுக்கான திட்டமும்*) என்ற புத்தகத்தை வாசிக்க வேண்டும்.

இந்த நூலின் ஆசிரியர் ஜொனதன் ஹில்மான், இலங்கை குறித்து வெளியிடுகின்ற அச்சம் யாதெனில், இலங்கையின் ஊடாக தென்னாசியாவில் செல்வாக்குச் செலுத்த சீனா முனையும். அவ்வகையில், இலங்கை மேலும் சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் செல்லாமல் காப்பாற்றுவது முக்கியமானது என்பதாகும்.

சீனாவின் இத்திட்டமானது, பல வழிகளில் புதிய உலக ஒழுங்கைக் கட்டமைக்கும் பணியை முன்னெடுக்கிறது. இந்தத் திட்டம், மேற்குலகுக்கு ஏற்படுத்தியுள்ள பிரதான சவால் யாதெனில், எந்தத் திறந்த சந்தைப் பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கையை மேற்குலகு முன்தள்ளுகிறதோ, அதையே பயன்படுத்தி சீனா தனது வலுவை நிறுவியுள்ளது.

கட்டற்ற வர்த்தகத்தையும் உலகமயமாக்கலையும் அனைவருக்கும் உரியதாக சீனா சாத்தியமாக்கி உள்ளது. இது மேற்குலகுக்குப் பெருத்த அச்சுறுத்தலாக உள்ளது. எந்தச் சட்டகத்தின் உதவியுடன், கடந்த சில தசாப்தங்களாக உலகக் கட்டுப்பாட்டை அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் பேணி வந்தார்களோ, இன்று அதே சட்டகத்தின் உதவியோடு, தனது அதிகாரத்தை சீனா முன்னிறுத்தும் போது முரண்பாடுகள் தவிர்க்கவியலாதவை.

பாகிஸ்தானில் சீனப் பணியாளர்களைக் குறிவைத்து தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. இதில், ஒன்பது சீனப் பணியாளர்கள் இறந்துள்ளார்கள். இந்நிகழ்வுகள், பணியாளர்களின் பாதுகாப்பு குறித்த கேள்விகளை சீனாவுக்கு எழுப்பியுள்ளன. தென்னாசியப் பிராந்தியத்தில், புதியதொரு சவாலை சீனா எதிர்கொள்கிறது. ஒருபுறம் இது பிராந்தியத்தின் அமைதி சார்ந்தது; சீனாவின் இருப்புச் சார்ந்தது.

மற்றையது, தொடக்கத்தில் சொன்னதுபோல, சீனாவின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதைத் தடுப்பதற்கான திட்டமிட்ட நடவடிக்கையா என்ற கேள்வியாகும்.

ஒருவகையில், ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகளின் வெளியேற்றத்தை அடுத்து ஏற்பட்டுள்ள ஸ்திரமற்ற தன்மையின் விளைவு என்று ஒருசாரார் சொல்கிறார்கள். இன்னொரு சாரார் இது, சீனாவுக்கு எதிரான புதிய மேற்குலக எதிர்வினையின் ஒரு பகுதி என்கிறார்கள். மொத்தத்தில், இது பிராந்தியப் பாதுகாப்பு குறித்த அடிப்படையிலானதாகும். இந்த மோதலில் இலங்கையும் சிக்கிச் சீரழியுமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

LKNewspapers Viber Community

சென்னை

தலித் கிறிஸ்தவர்களுக்கு பட்டியல் உரிமை வேண்டும்

# பேராயர் ஜோர்ஜ் ஸ்டீபன் வேண்டுகோள்



தலித் கிறிஸ்தவர்களை பட்டியலினத்தில் சேர்க்க குரல் கொடுங்கள் என, தமிழ்நாடு எம்.பிக்களுக்கு, பேராயர் கோரிக்கை விடுத்துள்ளார். தலித் கிறிஸ்தவர்களைப் பட்டியலினத்தில் சேர்க்க வேண்டும் என்று, பிரதமரிடத்தில் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் ஜோர்ஜ் ஸ்டீபன் வேண்டுகோள் விடுத்துள்ளார்,

தென்னிந்திய திருச்சபையின் பேராயர் ஜோர்ஜ் ஸ்டீபன் இதுதொடர்பில் கூறியதாவது:

இந்து மதத்தில் இருந்து மற்ற மதங்களுக்கு மாறிய தலித் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், பட்டியலினத்தவராகக் கருதப்பட மாட்டார்கள் என்று ஜனாதிபதி டொக்டர் ராஜேந்திர பிரசாத், கடந்த 1950ஆம் ஆண்டு ஒகஸ்ட் 10ஆம் திகதி ஆணை பிறப்பித்தார்.

அந்த நாளை, தலித் கிறிஸ்தவர்கள் கறுப்பு நாளாகவும் தங்களுக்கு உரிமை கோரும் நாளாகவும் கடைபிடித்து வருகிறார்கள். இந்த ஆணை சீக்கியர்களுக்கும் பௌத்தர்களுக்கும் தளர்த்தப்பட்டது. ஆனால், கிறிஸ்தவ சமயத்துக்கு மாறியவர்களுக்கு இன்னமும் தளர்த்தப்படவில்லை.

கிறிஸ்துவம் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆனால், கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டவர்கள், சமத்துவத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. கிறிஸ்தவத்திலும் ஏற்றதாழ்வுகள் இருக்கின்றன. இதற்காக, தலித் கிறிஸ்தவர்கள் ஜனநாயக ரீதியில் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள். இது குறித்த வழக்கு இருப்பதால், அந்தச் சட்டம் நீக்கப்படவில்லை. மதம் மாறிய கிறிஸ்தவர்களை பட்டியலினத்தவர்களாக அறிவிக்க, தமிழகத்தை சேர்ந்த அனைத்துக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் குரல் கொடுக்க வேண்டும். தலித் கிறிஸ்தவர்களுக்கு தாழ்த்தப்பட்டவர்களுக்கான உரிமையை வழங்க பிரதமர் மோடி ஆவன செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

# சுவிட்சர்லாந்தின் சேதன விவசாய நிபுணர்களுடன் கலந்துரையாடல்



சேதன விவசாய நடவடிக்கைகளில் நிபுணர்களாக அறியப்படும், சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த தூதுக்குழுவினர், இலங்கையின் பெருந்தோட்டத் துறை அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரன, அமைச்சின் செயலாளர் ரவீந்திர ஹேவாவிதாரன ஆகியோருடன் அண்மையில் சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தனர். இந்தச் சந்திப்பின் போது, பெருந்தோட்டத்துறையை மேம்படுத்துவது தொடர்பான நாட்டின் நோக்கம், சேதன உர சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகள் தொடர்பில் அமைச்சர் தமது கருத்துகளைப் பகிர்ந்திருந்தார்.

இந்த அறிவுப் பகிர்வு அமர்வின் போது, பல வினாக்களை அமைச்சர் கேட்டதுடன், சேதன உரக் கட்டமைப்பைப் பின்பற்றுவதால் எழக்கூடிய பிரதான சவால்கள் பற்றியும் குழுவினருடன் கலந்துரையாடியிருந்தார். நாட்டின் பொருளாதாரத்தின் பெருந்தோட்டத்துறையைச் சேர்ந்த பயிர்கள் பெருமளவு பங்கை வகிப்பதுடன், ஏற்றுமதியிலும், ஊழியர்களிலும் அதிகளவு பங்கைக் கொண்டுள்ளன. தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வு உற்பத்திகளுக்கான பிரதிப் பணிப்பாளர் கீர்த்தி எம். மொஹொட்டி இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தார்.

திறன்கள் விருத்தி, தொழிற்கல்வி, ஆய்வு மற்றும் புத்தாக்கம் தொடர்பான இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பொறியியல் திணைக்களத்தின் சிரேஷ்ட பேராசிரியருமான NIFS இன் இடைக்கால பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான பேராசிரியர் ரஞ்சித் டி சில்வா ஆகியோருடன் Zoom வாயிலாக மெய்நிகர் சந்திப்புகளையும் நிபுணர்கள் குழுவினர் அன்றைய தினம் மேற்கொண்டிருந்தனர்.

> நாட்டின் ஒட்டுமொத்த விவசாயக் கட்டமைப்பைப் பற்றி ஆராய்வதும் சேதன விவசாய முறைமையை பின்பற்றுவதற்கு விஞ்ஞான ரீதியில் தயார்படுத்துவதும் வழிகாட்டல்களை வழங்குவதும் போன்ற பணிகள், இந்த நிபுணர் குழுவின் விஜயத்தில் முக்கிய செயற்பாடுகளாக அமைந்திருந்தன

இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சில்வா, பாரம்பரிய உரப் பாவனையிலிருந்து சேதன விவசாய வழிமுறையைப் பின்பற்றச் செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய பயிற்சிகள், அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகள் தொடர்பான விளக்கங்களை பகிர்ந்திருந்தார்.

இதில், இந்த முக்கியத்துவம் வாய்ந்த மாற்றம் தொடர்பில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட உரிய கால தீர்மானங்கள் பற்றிய விளக்கங்களும் அடங்கியிருந்தன.

சேதன உரத்தின் பாவனையை ஊக்குவித்தல், உற்பத்தி தொடர்பில் இராஜாங்க அமைச்சின் செயலாளர் எம்.என். ரணசிங்க, மேலதிக செயலாளர் மஹேஷ் கம்மன்பில ஆகியோருடன் நிபுணர்கள் குழுவினர் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தனர்.

எதிர்வரும் பெரும் போகத்துக்காக பின்பற்றப்படும் முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பான கொள்கைகள், தந்திரோபாயங்கள் பற்றிய விளக்கங்களை உத்தியோகத்தர்கள் வழங்கியிருந்தனர். 'சுபீட்சமான எதிர்காலம்' எனும் தேசிய கொள்கையின் பிரகாரம், ஆரோக்கியமான தேசத்தைக் கட்டியெழுப்பும் பயணம் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் உள்நாட்டு பிரதிநிதியும் விவசாய நிபுணருமான சந்தன ஹேவாவசம் உடனும் அவர்கள் சந்திப்பை மேற்கொண்டிருந்ததுடன், இலங்கையிலுள்ள சுவிட்சர்லாந்து தூதரகத்தின் பிரதித் தூதுவர், GIZ ஸ்ரீ லங்கா அதிகாரிகளுடனும் சந்திப்புகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிபுணர் குழுவினர் பத்து நாள்கள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். இவர்களை ஏ.பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட் ஒப்பந்த அடிப்படையில் அழைத்து வந்திருந்தது. நாட்டின் ஒட்டுமொத்த விவசாயக் கட்டமைப்பைப் பற்றி ஆராய்வதும் சேதன விவசாய முறைமையை பின்பற்றுவதற்கு விஞ்ஞான ரீதியில் தயார்படுத்துவதும் வழிகாட்டல்களை வழங்குவதும் போன்ற பணிகள், இந்த நிபுணர் குழுவின் விஜயத்தில் முக்கிய செயற்பாடுகளாக அமைந்திருந்தன.

தென்காசி



# சங்கரன்கோவில் அகதிகள் முகாமில் திடீர் ஆய்வு

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் இலங்கை அகதிகள் முகாமை அகதிகள் மறுவாழ்வு நல ஆணையாளர், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் திருப்பூர் குமரன் நகர் பகுதியில் உள்ள இலங்கை அகதிகள் முகாமை மாவட்ட ஆட்சியர் கோபாலசுந்தரராஜ், இலங்கை அகதிகள் மற்றும் மறுவாழ்வு நலம் ஆணையாளர் ஜெசிந்தா லாஷர் ஆகியோர் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின்போது தங்கும் இடம், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, குழந்தைகளின் கல்வி, வேலைவாய்ப்புகள் குறித்து கேட்டு அறிந்தனர். பின்னர் முகாமில் உள்ளவர்கள் கோரிக்கை மனுக்களையும் கொடுத்தனர். அது குறித்து உரிய நடவடிக்கைகள் எடுப்பதாகவும் உறுதியளித்தனர்.

மேலும், இந்த ஆய்வின்போது வருவாய், சுகாதாரம், மருத்துவம் உள்ளிட்ட துறைசார்ந்த அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

அசாம்



லண்டனில் தேசிய கொடியை ஏந்திய வீராங்கனை

# தேயிலைத் தோட்டத்தில் கூலி வேலை பார்க்கும் அவலம்

டோக்கியோவில் இருந்து வெற்றி பதக்கங்களுடன் திரும்பியவர்களை இந்தியா கொண்டாடி வரும் அதே வேளையில், ஒலிம்பிக்கில் பங்கேற்ற வீராங்கனை ஒருவர் தனது குடும்பத்தைப் பாதுகாக்க தேயிலைத் தோட்டத்தில் கூலி வேலை பார்க்கும் அவலமும் இருக்கத்தான் செய்கிறது.

அசாம் மாநிலம் திப்ருகரைச் சேர்ந்த பிங்கி கர்மாக்கர் தான் அந்த வீராங்கனை ஆவார். இவர் 2012 ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் கொடியை ஏந்தி வலம் வந்த பெருமைக்குரியவர். அப்போது அவருக்கு 17 வயது. தான் படித்த பள்ளியில் யுனிசெப்பின் விளையாட்டு மேம்பாட்டு திட்ட பொறுப்பாளராக பிங்கி பணியாற்றினார். அவரது திறமையை அங்கிகரிக்கும் விதமாக ஒலிம்பிக்கில் இந்திய தேசிய கொடியை ஏந்தும் வாய்ப்பு அவருக்கு வழங்கப்பட்டது. இதனால் அசாம் மாநிலமே கௌரவம் அடைந்தது.

இலண்டனில் இருந்து பிங்கி சொந்த ஊர் திரும்பிய போது, பிரம்மாண்ட வரவேற்பும் அளிக்கப்பட்டது. ஆனால், அரசும் விளையாட்டு அமைப்புகளும் உறுதி அளித்தவாறு, அதன் பிறகு எதையும் செய்யவில்லை என்பது பிங்கியின் குமுறலாக இருக்கிறது. தற்போது குடும்பத்தை பாதுகாக்க தேயிலைத் தோட்டத்தில் தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு ரூ.167 வருமானம் ஈட்டி வருகிறார்.

“ஒலிம்பிக்கில் இந்திய தேசிய கொடியை ஏந்தி செல்லும் அறிய வாய்ப்புக்கு தேர்வு செய்யப்பட்ட போது, பல்வேறு உறுதிகளை அதிகாரிகள் அளித்தனர். மாத ஊதியம் கிடைக்கும்” எனவும் கூறினர். ஆனால் இதுவரை எந்த உதவியும் கிடைக்கவில்லை என்று பிங்கி வருத்தம் தெரிவித்துள்ளார். கூலி தொழிலாளியின் மகள், கூலியாக இருப்பது மட்டுமே உண்மை என்றும் அவர் தனது வேதனையை கொட்டியுள்ளார்.

இந்தியா

ஏ.டி.எம்மில் பணம் இல்லையேல்

# வங்கிகளுக்கு அபராதம்

ஒரு மாதத்தில் 10 மணி நேரத்துக்கு மேல் ஏ.டி.எம்மில் பணம் இல்லாமல் இருந்தால் அந்த வங்கிக்கு மையம் ஒன்றுக்கு ரூபாய் 10 ஆயிரம் வீதம் அபராதம் விதிக்கப்படும் என ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை, ஒக்டோபர் 1ஆம் திகதி முதல் அமலுக்கு வரும் என்று ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

வங்கிகளில் காத்திராமல் மக்கள் தங்கள் வங்கி கணக்கில் இருந்து பணம் எடுப்பதற்காக ஏ.டி.எம் மையங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. அந்த வகையில் கடந்த ஜூன் இறுதி நிலைவரப்படி நாடு முழுவதும் 2,13,766 ஏ.டி.எம் மையங்கள் உள்ளன. ஆனால் இந்த மையங்களில் சில நேரம் பணம் இல்லாததால் மக்களுக்கு சிரமம் ஏற்படுகிறது. இந்தச் சிரமங்களை களையும் வகையில், ஏ.டி.எம் மையங்களில் எப்போதும் பணம் இருக்கும் வகையில் ரிசர்வ் வங்கி நடவடிக்கை எடுத்து உள்ளது.



திருவனந்தபுரம்

# மது வாங்க தடுப்பூசி கட்டாயம்



கேரளாவில் கொரோனா பரவல் அதிகரித்து வருவதால், பொது இடங்களுக்கு செல்ல நிபந்தனைகள் கடுமையாகப்பட்டு உள்ளன.

அதன்படி முதல் டோஸ் தடுப்பூசி போட்டவர்கள், கொரோனா ஆர்.டி.பி.சி.ஆர். நெகடிவ் சான்றிதழ் அல்லது கொரோனா பாதித்து ஒரு மாதத்துக்கு மேலானவர்கள் மட்டுமே கடைகளுக்கு செல்ல வேண்டும் என கேரள அரசு உத்தரவிட்டது.

ஆனால், மது வாங்க செல்பவர்களுக்கு தளர்வுகள் இருந்தது. இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது.

இந்த நிலையில், கேரள அரசின் நடவடிக்கையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் ஏராளமான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதை விசாரித்த நீதிமன்றம் கடைகளுக்கும், அலுவலகங்களுக்கும் செல்பவர்களுக்கு மட்டும் நிபந்தனைகள் கடுமையாக்கப்பட்டு உள்ளது.

ஆனால், மது வாங்க செல்பவர்களுக்கு எந்த நிபந்தனையும் கிடையாது என்பது வேடிக்கையாக உள்ளது. எனவே, மது வாங்கச் செல்பவர்களுக்கும் நிபந்தனைகளைக் கடுமையாக்க வேண்டும் என்று தெரிவித்தது.

இதையடுத்து, கேரளாவில் மதுக்கடைகளுக்கு செல்பவர்களுக்கும் தடுப்பூசி உள்ளிட்ட நிபந்தனைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. முதல் டோஸ் தடுப்பூசி போட்டவர்கள், ஆர்.டி.பி.சி.ஆர். நெகடிவ் சான்றிதழ் உள்ளவர்கள், கொரோனா வந்து ஒரு மாதத்துக்கு மேலானவர்கள் மட்டுமே மது வாங்க கடைக்குச் செல்ல வேண்டும் என்று கேரள அரசு உத்தரவிட்டுள்ளது.

இதற்கிடையே தொற்று 8 சதவீதத்துக்கும் மேல் இருக்கும் பகுதிகளில் முழு ஊரடங்கை அமல்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# புதிய தலைமுறை தீர்வுகளை வழங்கும் SLT-MOBITEL




93 Fife Residencies (Pvt) Ltdக்கு நவீன தொலைத் தொடர்பாடல் சேவைகளை வழங்குவதற்கான உடன்படிக்கையில் SLT-MOBITEL கைச்சாத்திட்டுள்ளது. மக்களின் வாழ்க்கையை மாற்றியமைக்கும் தனது அர்ப்பணிப்புக்கமைய இந்த அதிசொகுசு தொடர்மனைத் தொகுதியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் SLT-MOBITEL கைச்சாத்திட்டுள்ளது.

கொழும்பு, கோட்டையில் அமைந்துள்ள SLT-MOBITEL இன் தலைமையகத்தில் இந்த உடன்படிக்கை அண்மையில் கைச்சாத்திடப்பட்டதுடன், இதில் SLT இன் பிரதம நிறைவேற்று அதிகாரி கித்தி பெரேரா, பிரதம விற்பனை மற்றும் பிராந்திய அதிகாரி இமந்த விஜேகோன், 93 Fife Residencies (Pvt) Ltd இன் பணிப்பாளர்களான எம்.எம். மொஹினுதீன், எம்.எம். பசுஹுதீன் ஆகியோர் கைச்சாத்திட்டனர். இரு நிறுவனங்களின் ஏனைய பிரதிநிதிகள் பலரும் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

இந்தப் பங்காண்மையுடன், SLT-MOBITEL இனால் 93 Fife தொடர்மனைத் தொகுதிக்கு ஸ்மார்ட் கட்டடத்துக்கு அவசியமான பின்புலம் வழங்கப்படும். விரைவில் குடியிருப்பின் வசிப்போரின் வாழ்க்கையை டிஜிட்டல் வாழ்க்கை முறையாக மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கொழும்பு - 05 இல் அமைந்துள்ள 93 Fife Residencies தொடர்மனைத் தொகுதி, வேகமாக வளர்ந்து வரும் வணிக மையம் ஒன்றில் 40 பேர்ச் காணியில் அமைந்துள்ளது.

> ஒப்பற்ற நவீன வாழ்க்கை முறை தெரிவுகளை வழங்குவதுடன், அடுத்த தலைமுறை வேகத்தை வாடிக்கையாளர்களுக்கு வழங்காமல், சொகுசு என்பது பூரணமாகாது என்பதை SLT-MOBITEL புரிந்து கொண்டுள்ளது

புதிய தலைமுறையினரின் கேள்விகளை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள தொடர்மனைத் தொகுதியில், 42 அலகு இல்லங்கள் அமைந்துள்ளதுடன், குடியிருப்பாளர்களுக்கு ஒப்பற்ற நவீன வாழ்க்கை முறை தெரிவுகளை வழங்குவதாக அமைந்துள்ளது.

அடுத்த தலைமுறை வேகத்தை வாடிக்கையாளர்களுக்கு வழங்காமல், சொகுசு என்பது பூரணமாகாது என்பதை SLT-MOBITEL புரிந்து கொண்டுள்ளது. எனவே, தொடர்மனைத் தொகுதிக்கான டிஜிட்டல் தீர்வுகள் வழங்குநர் எனும் வகையில், சகல தொகுதிகளுக்கு நவீன ஃபைபர் தொழில்நுட்பத்திலமைந்த SLT-MOBITEL Fibre ஐக் கொண்டு வலுவூட்டும். இதனூடாக, இந்தத் தொடர்மனைத் தொகுதியில் வதிவோருக்கு முன்னர் அனுபவித்திராத, 100 Mbps வேகம் வரையான ஆகக்கூடிய புரோட்பான்ட் வேகங்களை அனுபவிக்க முடியும். 93 Fife ஐச் சேர்ந்த குடியிருப்பாளர்களுக்கு, SLT-MOBITEL PEOTV உடன் தடங்கலில்லாத தொலைக்காட்சி பார்வை அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

SLT இன் பிரதம நிறைவேற்று அதிகாரி கித்தி பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், “இந்த பெருமைக்குரிய முன்னணித் திட்டத்துடன் கைகோர்த்துள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இதனூடாக 93 Fife இல் வதிவோருக்கு உயர் தர இணைப்புத் தீர்வுகளை வழங்கி, டிஜிட்டல் சமூகத்துக்கான மதிநுட்பமான இல்லத் தொழில்நுட்பங்களை ஏற்படுத்திக் கொடுத்து நகர மத்தியிலான வாழ்க்கையை சிறந்த வகையில் முன்னெடுப்பதற்கு பங்களிப்பு வழங்க முன்வந்துள்ளோம்” என்றார்.

ஆப்கானிஸ்தான்

90 நாள்களுக்குள்

# ‘ஆப்கான் தலைநகரை தலிபான் கைப்பற்றும்’

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலை 90 நாள்களுக்குள் தலிபான் கைப்பற்றும் என ஐக்கிய அமெரிக்க புலனாய்வு மதிப்பீடு ஒன்றை மேற்கோள் காட்டி றொய்ட்டர்ஸ், வொஷிங்டன் போஸ்ட் ஆகிய இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஒன்பது மாகாணத் தலைநகர்களை தலிபான் கைப்பற்றியுள்ள நிலையில், 30 நாள்களில் காபூலை தலிபான் தனிமைப்படுத்தலாம் என இவ்விடயம் தொடர்பாக அறிந்த அதிகாரி ஒருவர் றொய்ட்டர்ஸுக்குத் தெரிவித்துள்ளார்.





ஐ. அமெரிக்கா

கொரோனா தொற்றிய

## சிறுவர்களுக்கு குணங்குறிகள் இல்லை


**'புகைத்தலால் தடுப்புமருந்து பதிலளிப்பு குறைவு'**

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் பிரசுரிக்கப்பட்ட 350க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிகளின் தரவுகளின் மீளாய்வின்படி கொரோனாவுடைய ஏறத்தாழ மூன்றிலொரு பங்கினர் எந்தவொரு குணங்குறிகளையும் கொண்டிருக்கவில்லை.

வயதான அல்லது ஏற்கெனவே மருத்துவ நிலைமைகளைக் கொண்டிருந்தோரை விட சிறுவர்களில் குணங்குறிகளற்ற தொற்று பொதுவானதாகக் காணப்படுவதாக யேல் பொதுச் சுகாதாரப் பாடசாலையின் பிரதா சஹ் தெரிவித்துள்ளார்.

ஏறத்தாழ 46.7 சதவீதமான தொற்றுக்குள்ளான சிறுவர் குணங்குறிகள் எதையும் வெளிப்படுத்தவில்லை என மதிப்பிட்டதாக சஹ் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தற்போதும் புகைத்துக் கொண்டிருப்பவர்கள் சில தடுப்புமருந்துகளிலிருந்து குறைவான எதிர்ப்புசக்தியைப் பெறும் ஆபத்தில் இருப்பதாக ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.




ஐ. அமெரிக்கா

## $600 மில்லியனை களவாடி $261 மில்லியன் ஒப்படைப்பு

நிதித் தளமான பொலி நெட்வேர்க்கிலிருந்து 600 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை மெய்நிகர் நாணயத்தில் ஹக்கர்கள் திருடியுள்ளனர்.

இந்நிலையில், பணத்தை மீள அளிக்குமாறு தாக்குதலாளியை பொலி நெட்வேர்க் கெஞ்சியிருந்தது.

இந்நிலையில், ஏறத்தாழ 261 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் திரும்பியுள்ளது.

அந்தவகையில், விளையாட்டுக்காக பொலி நெட்வேர்க்கை ஹக் செய்ததாக தாக்குதலாளி தெரிவித்துள்ளார்.



கனடா

சவுதிக்கு ஆயுதங்களை விற்று

## சர்வதேச சட்டத்தை மீறும் கனடா

சவுதி அரேபியாவுக்கு ஆயுதங்களை விற்பதன் மூலம் சர்வதேச சட்டத்தை கனடா மீறுவதாக, கனடா சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

இந்நிலையில், சவுதிக்கான அனைத்து ஆயுத ஏற்றுமதிகளையும் இடைநிறுத்துமாறு கனடாவை அந்நாட்டு சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்துகின்றது.

கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் அரசாங்கமானது ஆயுதங்கள் வர்த்தக ஒப்பந்தத்தை மீறுவதாக நேற்று முன்தினம் வெளியான அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.




ஜேர்மனி

ரஷ்யாவுக்காக

## உளவு பார்த்த பிரித்தானியர் கைது

ஜேர்மனியின் தலைநகர் பேர்லினிலுள்ள பிரித்தானியத் தூதரகத்தில் பணியாற்றும் பிரித்தானியர் ஒருவரை, பணத்துக்காக ரஷ்ய புலனாய்வுச் சேவைக்கு ஆவணங்களை கொடுத்த சந்தேகத்தில் ஜேர்மனிய பொலிஸார் கைது செய்ததாக, ஜேர்மனிய அரச வழக்குத் தொடருநர்கள் தெரிவித்துள்ளனர்.

குறைந்தது ஒரு தடவையாவது தனது தொழில்முறை நடவடிக்கைகளால் தான் பெற்ற ஆவணங்களை ரஷ்ய புலனாய்வுச் சேவையின் பிரதிநிதி ஒருவரிடம் குறித்த நபர் கையளித்ததாக, அறிக்கை ஒன்றில், ஜேர்மனியின் சட்டமா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஜப்பான்

# தரை தட்டியது கப்பல்; எண்ணெய் கசிகின்றது

வட ஜப்பானிய துறைமுகம் ஒன்றில், பனாமாவில் பதிவு செய்யப்பட்டுள்ள கப்பல் ஒன்றானது தரை தட்டியதுடன், எண்ணெயையைக் கசிய விட்டுள்ளது.

எனினும், கப்பலின் 21 மாலுமிகள் குழாமுக்கு காயங்கள் எதுவும் இல்லாததுடன், எண்ணெய்க் கசிவு கட்டுப்படுத்தப்பட்டதுடன், கசிவு கரையை அடைந்ததாக தடயங்கள் எதுவும் இல்லை என ஜப்பான் கரையோரக் காவற்படை தெரிவித்துள்ளது.

'கிறிம்ஸன் பொலாரிஸ்' எனப்படும் குறித்த கப்பலானது நேற்று முன்தினம் காலையில் ஹஷினொஹ்னே தரை தட்டும்போது மரப் பலகைகளைக் கொண்டிருந்துள்ளது.



சகலதுறை வீரர்களுக்கான தரவரிசையில்

# முதலாமிடத்துக்கு முன்னேறிய ஷகிப்

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளுக்கான சகலதுறைவீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் முதலாமிடத்துக்கு ஷகிப் அல் ஹஸன் முன்னேறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் ஏழு விக்கெட்டுகளைக் கைப்பற்றியதோடு, 114 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலேயே, இரண்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி முதலாமிடத்தை ஷகிப் அடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு.

ஷகிப் அல் ஹஸன், 2. மொஹமட் நபி, 3. றிச்சர்ட் பெரிங்டன், 4. கஹவர் அலி, 5. கொலின்ஸ் ஒபுயா.

இந்நிலையில், குறித்த தொடரில் மூன்று விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அவுஸ்திரேலியாவின் அஸ்தன் அகர், எட்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஏழாமிடத்தை அடைந்துள்ளார்.

இத்தொடரில், ஏழு விக்கெட்டுகளைக் கைப்பற்றிய பங்களாதேஷின் முஸ்தபிசூர் ரஹ்மான், பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் 30ஆம் இடத்திலிருந்து 20 இடங்கள் முன்னேறி 10ஆம் இடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

தப்ரையாஸ் ஷம்சி, 2. வனிடு ஹஸரங்க, 3. ரஷீட் கான், 4. அடில் ரஷீட், 5. முஜீப் உர் ரஹ்மான், 6. டிம் செளதி, 7. அஸ்தன் அகர், 8. அடம் ஸாம்பா, 9. இஷ் சோதி, 10. முஸ்தபிசூர் ரஹ்மான்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,



டேவிட் மலான், 2. பாபர் அஸாம், 3. டெவோன் கொன்வே, 4. ஆரோன் பின்ஞ், 5. விராட் கோலி, 6. லோகேஷ் ராகுல், 7. மொஹமட் றிஸ்வான், 8. மார்டின் கப்தில், 9. எவின் லூயிஸ், 10. றஸி வான் டர் டுஸன்.

இதேவேளை, டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில், இந்தியாவுக்கெதிரான முதலாவது டெஸ்டில் 173 ஓட்டங்களைப் பெற்ற இங்கிலாந்தின் ஜோ றூட், ஐந்தாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி நான்காமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

கேன் வில்லியம்ஸன், 2. ஸ்டீவ் ஸ்மித், 3. மர்னுஸ் லபுஷைன், 4. ஜோ றூட், 5. விராட் கோலி, 6. றோஹித் ஷர்மா, 7. றிஷப் பண்ட், 8. டேவிட் வோணர், 9. குயின்டன் டி கொக், 10. ஹென்றி நிக்கொல்ஸ், பாபர் அஸாம்.

இந்நிலையில், இந்த டெஸ்டில் நான்கு விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இங்கிலாந்தின் ஜேம்ஸ் அன்டர்சன், எட்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஏழாமிடத்தை அடைந்துள்ளார்.

தவிர, குறித்த டெஸ்டில் ஒன்பது விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இந்தியாவின் ஜஸ்பிரிட் பும்ரா, 19ஆம் இடத்திலிருந்து 10 இடங்கள் முன்னேறி ஒன்பதாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

பற் கமின்ஸ், 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. டிம் செளதி, 4. ஜொஷ் ஹேசில்வூட், 5. நீல் வக்னர், 6. ககிஸோ றபாடா, 7. ஜேம்ஸ் அன்டர்சன், 8. ஸ்டுவர்ட் ப்றோட், 9. ஜஸ்பிரிட் பும்ரா, 10. மிற்செல் ஸ்டார்க்.

இந்த டெஸ்டில் 56 ஓட்டங்களைப் பெற்ற இந்தியாவின் இரவீந்திர ஜடேஜா, சகலதுறைவீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில், மூன்றாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி இரண்டாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜேஸன் ஹோல்டர், 2. இரவீந்திர ஜடேஜா, 3. பென் ஸ்டோக்ஸ், 4. இரவிச்சந்திரன் அஷ்வின் 5. ஷகிப் அல் ஹஸன்.




## சுப்பர் கிண்ணம்: சம்பியனான செல்சி

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சுப்பர் கிண்ணப் போட்டியில், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சி சம்பியனானது.

வட அயர்லாந்தின் தலைநகர் பெல்ஃபாஸ்டில் நேற்று அதிகாலை நடைபெற்ற இப்போட்டியில், ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோ கிண்ணத் தொடரின் சம்பியன்களான வில்லாறியலை வென்றே ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக்கின் சம்பியனான செல்சி சம்பியனானது.

இப்போட்டியானது வழமையான நேரத்தில் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்ததைத் தொடர்ந்து, மேலதிக நேரத்திலும் அவ்வாறே காணப்பட்டு, பின்னர் பெனால்டியிலேயே 6-5 என்ற ரீதியில் ஸ்பானிய லா லிகா கழகமான வில்லாறியலை வென்று செல்சி சம்பியனாகியிருந்தது.

செல்சி சார்பாகப் பெறப்பட்ட ஹக்கிம் ஸியெச்சும், வில்லாறியல் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜெரார்ட் மொரேனோவும் பெற்றிருந்தனர்.

ஏழாவது பெனால்டி வரையில் சென்ற நிலையில், இரண்டு உதைகளை செல்சியின் கோப்பாளர் கேபா அரிஸபலகா தடுத்திருந்தார்.



## புத்தளம் கால்பந்தாட்ட லீக் உறுப்பினர்கள் சந்திப்பு

■ எம்.யூ.எம். சனூன்

புத்தளம் நகர சபைத் தலைவரும், புத்தளம் கால்பந்தாட்ட லீக்கின் தலைவருமான எம்.எஸ்.எம். ரபீக்குடன், லீக் அங்கத்தவர்கள் பங்கேற்ற விசேட சந்திப்பொன்று அண்மையில் புத்தளம் நகர சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

புத்தளத்தில், கல்பந்தாட்டத் துறையில் மாத்திரமல்லாமல் பல்வேறு பட்ட விளையாட்டுக்களில் சடுதியான மாற்றங்களை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்த ரபீக், 400 மீற்றர், 200 மீற்றர் ஓட்டத்துக்கான பயிற்சிகளை இலவசமாக வழங்க பயிற்சியாளர்களை நியமிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை நகர சபை மைதானத்தை கால்பந்தாட்ட போட்டிகளுக்கு மானிய அடிப்படையில் வழங்கவுள்ளதாகவும் ரபீக் தெரிவித்தார்.

ரபீக் பல்வேறு துறை சார்ந்த விளையாட்டுக்களில் சிறப்பாக செயலாற்றி வந்தமையோடு கால்பந்தாட் மத்தியஸ்தராகவும், புத்தளத்தின் பாரம்பரிய விளையாட்டுக்களுக்கு நடுவராகவும் இன்றும் கடமையாற்றி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கிழக்கு முதலமைச்சரின் வளாகத்தில்

## உடற்பயிற்சி நிகழ்வு

■ பைஷல் இஸ்மாயில்

தேசிய விளையாட்டு தினத்தை முன்னிட்டு இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைவாக, அரசாங்க உத்தியோகத்தர்களின் விளையாட்டுத் திறனையும், உடற்பயிற்சித் திறனையும் விருத்தி செய்யும் வகையில் 15 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்யும் நிகழ்வானது கிழக்கு மாகாண முதலமைச்சரின் வளாகத்தில் இடம்பெற்றது.

முதலமைச்சரின் செயலாளர் யூ.எல்.ஏ. அஸீஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வு விளையாட்டு ஆசிரியர் ஜே. சுவாசினியின் வழிகாட்டலில் இந்நிகழ்வு நடைபெற்றது.





இந்நிகழ்வில், ஆளுநர் செயலகம், முதலமைச்சு, சுகாதார அமைச்சு, மாகாண ஆயுர்வேத திணைக்களம், மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், உள்ளிட்ட பல மாகாண திணைக்களங்களின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

LK Newspapers Viber Community

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 13 ஒகஸ்ட் 2021, இல. 8, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.